மேழிச்செல்வம்

சோபகிருது ௵ • தை ௴

P855
MADRAS RECORD OFFICE
12042
9 - MAR 1964
855
MADRAS

இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரி தென்னை நாற்றங்காலை 15—12—62 அன்று உள்துறை விவசாய அமைச்சர் பி. கக்கன் அவர்கள் பார்வையிடுதல்.

தென்னை நாற்றங்காலை அமைச்சர் பாராட்டுதல்.

[புகைப் படங்கள் : நாற்றங்கால் உதவியாளர், சிங்கம்புணரி.]

மேழிச் செல்வம்

அட்டைப்படம்

சித்ம்பரம் பகுதியில் மாதிரிப் பண்ணை ஒன்றில் செழித்து வளர்ந்திருக்கும் நெற்பயிரின் தோற்றம்.

(போட்டோ—விவசாயச் செய்தி நிலைய போட்டோகிராபர்)

வெளியிடுபவர்:

தமிழ்நாடு விவசாயத்துறை நெறியாளர்

சென்னை-5.

வருட சந்தா	ரூ.	3·00
தனிப்பிரதி	ரூ.	0·25

உள்ளுரை

	பக்கம்
காய்கறி தினம்	5
விளைச்சல் பெருக்கும் விஞ்ஞானியர் குழு	8
வீட்டுத் தோட்டங்களுக்கேற்ற காய்கறி (கோவைக்காய்)	9
தென்னைக்கு உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்	10
கரிசல் நிலத்தில் கம்பு மகசூலை அதிகரிக்க சிறந்த வழி	12
சிறந்த பருத்தி சாகுபடி ..	13
கே-6 (பாண்டியன்) பருத்தியின் பூவும் பிஞ்சும் உதிர்வது தடுக்க "ஆல்பா நாப்தலீன் அசெடிக் ஆசிட்" ..	14
"பாலகன் முறை" மணிலா சாகுபடி ..	16
பசுந்தாள் உர உற்பத்தியில் மணியாச்சி பஞ்சாயத்தின் முயற்சி ..	16
பயன்தரும் பயிறு	17
விளைச்சலின் முழு பயனையும் பெற உரிய காலத்தில் அறுவடை செய்யுங்கள் ..	17
பிரஸ்மட் கம்போஸ்ட் உரம் ..	18
மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்	18
இரும்புக் கலப்பைகளின் கொழுக்களை கூர்மையாக்கும் முறைகள் ..	20
பட்டி வீரன்பட்டி கூட்டுறவு காப்பி கியூரிங் இன்டஸ்ட்ரியல் சொசைட்டி	22
காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின் பலன் கத்தரியில் இரட்டிப்பு மகசூல்	23
விவசாயச் செய்திக் கதிர்	24
1963-ம் ஆண்டு நவம்பர் மாதத்திய காலநிலை அறிகை	26
வெற்றிப்பாதை	28
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்	30
பஞ்சாயத்து பழத்தோட்டம் ..	31

விளம்பரங்கள் :

டி. எ. வி. பி.	4
டாடா-பைஸன் அண்டு ராலீஸ் ..	7
கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.	11
பொட்டாஷ்	15
ரங்கசாமி அண்டு கோ ..	19,25
ராஜா பண்ணைத் தோட்டம் ..	21
சேலம் நர்சரி...	22

நாட்டின் பாதுகாப்புக்கும்



அபிவிருத்திக்கும்

நெருங்கிய தொடர்பு உண்டு!

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், தேசிய பாதுகாப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நெருக்கடியை சமாளிக்க சில தொழில்களுக்கு புதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மின்சாரத் திட்டங்கள், உருக்கு போன்ற அடிப்படைத் தொழில்கள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், மின்சா சங்கள். நிலக்கரிச் சுரங்கங்கள், ரயில்வேக்கள், இஞ்சினியரிங் மற்றும் மருத்துவ நபர்களைப் பயிற்சியிப்பது, ஆகியவைகள், துரிதகதியில் நடைபெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதிரி உறுதியான அஸ்திவாரத்திலேயே நாட்டின் பாதுகாப்புச் சக்தி உருவாகிறது. நம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது ஒன்றே ஏற்ற பணி.

உங்களால் முடிந்த ஒவ்வொரு வழியிலும்—எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும்-இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளியுங்கள். லக்ஷக்கணக்கான மக்களின் சலியாத உழைப்பாலும், சுயநலமற்ற உழைப்பாலுமே இந்தியா தன் படை பலத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கருதுகிறது.

திட்டத்திற்கு உதவுங்கள்

இந்தியாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள்

DA 63/39

மலர் 21 | சோபகிருது஝ தைமீ — 1964 — ஜனவரி - பிப்ரவரி | இதழ் 1

காய்கறி தினம்

(விவசாயச் செய்தி நிலயம், சென்னை-2)

பாரத் சேவக் சமாஜ் ஆதரவில் 1964-ம் ஆண்டு • ஜனவரி மாதம் 17-ம் தேதியன்று ராஜாஜி ஹாலில் "காய்கறி தினம்" கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு உள்துறை விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் தமது தலைமை உரையில் நகர மக்கள் அனைவரும் தங்களது இல்லங்களில் வசதியுள்ள இடங்களில் காய்கறிகளைப் பயிரிடவேண்டும். இதனால் காய்கறிகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தமுடியும் என்று கூறினார். சென்னை மாநகர காய்கறி உற்பத்திக் குழு, காய்கறி பெருக்க முயற்சியில் நல்ல பணி புரிந்திருக்கிறது. கடந்த 10 மாதங்களில், அதற்கு முன் ஐந்து வருடங்களில் விற்காத அளவிற்கு காய்கறி விதையும், நாற்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. இது ஒரு போற்றத்தக்க சாதனை என்றும் கூறினார்.

முன்னர் திரு. சி. ஆர். பட்டாபிராமன், மத்திய தொழிலாளர் துறை, திட்ட துணை அமைச்சர் காய்கறி கண்காட்சி ஒன்றை திறந்து வைத்துப் பேசுகையில் மக்கள் அனைவரும் தங்கள் உணவில் அதிக அளவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். வெறும் அரிசி உணவு மட்டும் உண்பவர்களாக இல்லாமல் பலவகை தானியங்களும் கொண்ட கலப்பு உணவு உண்ணவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இப் பகுதிகளில் காய்கறி உற்பத்தியில் செயல்படுத்தியுள்ள நல்ல சாதனையைப் பெரிதும் பாராட்டினர்.

திரு. வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்., வருவாய்த்துறைச் செயலாளர் தமது உரையில் சீன ஆக்கிரமிப்பின் விளைவால் துவக்கிய காய்கறி அபிவிருத்தித் திட்டம் ஒரு வருடத்தில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. காய்கறித் தோட்டப் போட்டியில் 200-க்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டிருப்பதே இத் திட்டத்தின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டு. காய்கறி ஒரு அத்தியாவசியமான உணவுப்பொருள், அவைகளை நியாயமான விலையில் நிரந்தரமாகக் கிடைக்கச் செய்யவேண்டும் என்று கூறினார்.

தமிழ்நாடு விவசாயத்துறை நெறியாளர் டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அடுத்துப் பேசுகையில் திருமதி பார்வதி சீனிவாசன் முயற்சியில் ராயப்பேட்டையில் காய்கறி உற்பத்தியாளர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதைப் போன்ற சங்கங்கள் இன்னும் அநேக இடங்களில் அமைக்கப்படவேண்டும். இச் சங்கங்களினால் வீட்டுத் தோட்டக்காரர்களுக்குச் சம்பந்தப்பட்ட தகவல்களை விரைவில் பரப்ப வழி ஏற்படும் என்று கூறினார். அரசாங்கம் காய்கறி பெருக்க முயற்சியில் ஒரு தூண்டுகோலாகத்தான் உதவமுடியும், ஆயிரக்கணக்கான வீடுகளில் தோட்டம் அமைத்துக் கொடுக்க இயலாது. பாரத் சேவக் சமாஜ் போன்ற பொது நல ஸ்தாபனங்களால் தான் இது சாத்தியமாகும். காய்கறி உற்பத்திக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். இச் சங்கங்கள் மூலமே தேவைக்கு அதிகமான காய்கறிகளை விற்பனை செய்யமுடியும் என்று கூறினார்.

பின்னர் அமைச்சர் திரு. பி. கக்கன் காய்கறி தோட்டப் போட்டியில் பரிசு பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கினர்.

பரிசு பெற்றோர் விவரம்

முதற் பகுதி

முதல் பரிசு
1. திருமதி பி. மாதவ மேனன், 53, தியாகராஜ ரோடு, சென்னை.
2. திருமதி ராஜலக்ஷ்மி பாபு, 5, வைத்தியநாதன் தெரு, சென்னை-34.
3. திருமதி சத்திய நாராயண ராவ், 6, கிருஷ்ணமாச்சாரி தெரு, சென்னை-34.

இரண்டாம் பரிசு
1. திருமதி சி. கமலாபாய், 23, வைத்தியராம அய்யர் தெரு, தி. நகர், சென்னை.

மூன்றாம் பரிசு
1. திரு. சுந்தரகோபாலன், 16, வாசுதேவபுரம், மாம்பலம்.

இரண்டாம் பகுதி

முதல் பரிசு
1. திருமதி எஸ். கே. பி. சத்திய நாராயண ராவ், 6, கிருஷ்ணமாச்சாரி தெரு, நுங்கம்பாக்கம்.

இரண்டாம் பரிசு
1. வி. ஆர். எஸ். பாண்டியன், 3, முதல் மெயின் தெரு, ராஜா அண்ணாமலை புரம்.

மூன்றாம் பரிசு
1. திருமதி பி. கக்கன்.
2. திருமதி சரோஜ் கோயங்கா, எக்ஸ்பிரஸ் எஸ்டேட், சென்னை–2.
3. அமைச்சர் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார், கூவம் இல்லம், சென்னை-2.

மூன்றாம் பகுதி (கல்லூரிகள்)

முதற் பரிசு — மேரி ராணிக் கல்லூரி, சென்னை-4.
இரண்டாம் பரிசு — லோயோலா கல்லூரி, நுங்கம்பாக்கம்.
மூன்றாம் பரிசு — மாதர் கிறிஸ்துவ கல்லூரி, நுங்கம்பாக்கம்.

மூன்றாம் பகுதி (ஆரம்ப பள்ளிகள்)

முதற் பரிசு — பால விஹார், ஹால்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம்.
இரண்டாம் பரிசு — பாலர் கல்வி நிலையம், சென்னை-7.

மூன்றாம் பகுதி (இதர ஸ்தாபனங்கள்)

முதற் பரிசு — ஆந்திர மகிள சபா, மருத்துவ இல்லம், அடையாறு.
இரண்டாம் பரிசு — பிராந்திய பருவகால ஆராய்ச்சி நிலையம், சென்னை-6.
மூன்றாம் பரிசு — பொதுக் கல்வி நெறியாளர் அலுவலகம், சென்னை-6.

மூன்றாம் பகுதி (பள்ளிகள்)

முதற் பரிசு — குழந்தைகள் க்ஷேம நல ஆதரவுப் பள்ளி, சென்னை-3.
இரண்டாம் பரிசு — லேடி சிவசாமி அய்யர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, சென்னை-4.
மூன்றாம் பரிசு — எம். சி. சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளி, தொண்டையார்பேட்.

விழாவிற்கு வந்திருந்தோரைப் பாரத் சேவக் சமாஜ் தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் வரவேற்றார்.

விழாவையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சியில் நகர வீட்டுத் தோட்டக் காய்கறிகளும், விதவிதமாக சமைக்கப் பட்ட காய்கறி பதார்த்தங்களும், பதம் செய்யப்பட்டு பக்குவப்படுத்தப்பட்ட காய்கறி வகைகளும், பயிர் பாதுகாப்புக் கருவிகள், மருந்துகள், உர வகைகளும் வைக்கப்பட்டிருந்தன. மேரி ராணிக் கல்லூரி, பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரி, சேவா சங்கம், இதர பூச்சி மருந்து, பயிர் பாதுகாப்பு கருவிகள், உர விற்பனை ஸ்தாபனங்கள் கலந்து கொண்டன.

———

உயிர்ச்சத்து நிறைந்த காய்கறிகளை ஊக்கத்துடன் பயிர் செய்யுங்கள்

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ் —— 'விஷய ஞானம்' உள்ளவர்கள்!

'ஜனங்களுக்கு நிரூபிக்கவேண்டும்' என்ருர் டாடா.

'மேளதாளத்தோடு கூட்டம்போட்டுத்தானே?' என்று கேட்டார் பைஸன் நம்பிக்கையோடு.

'ஆடம்பரம் எதற்கு?' என்று அவரை மட்டம் தட்டினுர் ராலீஸ். 'உபயோகமானதாக இருக்கவேண்டும். நமது உரங்களும், பூச்சி மருந்துகளும் மேலும் தரமான, நோய்நொடியற்ற பயிரை எப்படி வளர்த்து, பாதுகாக்கவும் செய்கின்றன என்று நிரூபிக்க வேண்டும்.'

டாடா-பைஸனும் ராலீஸும் தனித்தியங்கிவந்த தங்கள் விற்பனை நிறுவனங்களை இணைத்து ஒரே ஸ்தாபனமாக்கிவிட்டனர். இனி டாடா-பைஸன் தயாரிப்புகள் யாவற்றையும் ராலீஸின் 'ஃபெர்டிலைஸர் அண்ட் பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன்' விற்பனைக்குக் கொண்டுவரும். இவ்விணைப்பினுல் இந்திய விவசாயிக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்படும். முதன்முறையாக நாடு பூராவும் பயிர் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, பயிர்ப் பாதுகாப்புக்கும் தேவையான ஆலோசனைகளும் தயாரிப்புகளும் இணைக்கப்பட்ட ஒரே ஸ்தாபனத்தின் மூலம் கிட்டப்போகிறது......விவசாய முன்னேற்றத்திற்கு குறிப்பிடத்தக்க சேவை இது என்பதைக் கூறவும் வேண்டுமா?

TATA-FISON RALLIS டாடா-பைஸன் அண்ட் ராலீஸ் பயிர் அபிவிருத்திக்குப் பணி புரிகிறது!

TFRY-3

விளைச்சல் பெருக்கும் விஞ்ஞானியர் குழு

மு. காசி விஸ்வநாதன், விரிவினை வல்லுநர்.

நாட்டில் நிலவிவரும் நெருக்கடியான நிலைமையில் பல துறைகளிலும், குறிப்பாக விவசாயத் துறையிலும் உற்பத்தியை உயர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. உற்பத்தியை உயர்த்தும் இம் மாபெரும் பணியில் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒரு குழுவினராகச் சேர்ந்து பணியாற்ற "விளைச்சல் பெருக்கும் விஞ்ஞானியர் குழு" ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தங்களிடமுள்ள நிலம், உழைப்பு, பண வசதி, விவசாயத்திற்கு வேண்டிய விதை, உரம், மருந்துகள் போன்ற மற்ற சாதனங்களைச் சரியான முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தி அவர்கள் பண்ணையின் உற்பத்தியையும், வருவாயையும் அதிகரிக்கத் தேவையான ஆலோசனைகளையும், வழி முறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி உதவுவதே இக் குழுவின் நோக்கமாகும்.

1963-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தின் சுற்றுப்புறங்களிலுள்ள தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர், பேரூர், பெரியநாயக்கன்பாளையம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களைச் சேர்ந்த 22 கிராமங்களில் இக் குழுவினர் பணி புரிந்து வருகிறார்கள். இப் பணிக்காக விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள ஆராய்ச்சி அலுவலர்களும், உதவியாளர்களும் 22 அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு அணிக்கும் தலைவர் ஒரு முதல் தர ஆபீசர், ஒவ்வொரு அணியிலும் தலைவரைத் தவிர்த்து பத்து உறுப்பினர்கள் உள்ளனர். இவற்றில் ஒருவர் உபதலைவராகப் பணியாற்றுவார். விவசாயிகளின் பல தரப்பட்ட பிரச்னைகளைக் கேட்டு ஆலோசனைகள் கூறுவதற்கேற்றவாறு ஒவ்வொரு அணியிலும் உழவியல், பூச்சிப் பிரிவு, பயிர் நோய்ப் பிரிவு, இரசாயனப் பிரிவு, பழத்துறைப் பிரிவு ஆகிய பல பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் பத்து விளைபுலங்களைக் கவனிக்கவேண்டும். துணைத் தலைவரையும் சேர்த்து ஒவ்வொரு அணியிலும் பத்து பேர் இருப்பதால் ஓர் அணியினர் நூறு விளைபுலங்களைக் கவனிக்கமுடியும். ஆகவே 22 அணியினரும் சேர்ந்து மொத்தமாக 2,200 விளைபுலன்களைக் கவனிக்கமுடியும். விடுமுறை நாட்களிலும், அலுவலக வேலை நேரம் தவிர மற்ற நேரங்களிலும் தான் உறுப்பினர்கள் தங்களுக்குரிய கிராமத்துக்குச் சென்று தங்கள் பணியை ஆற்றுவதால் அவரவர்கள் தங்கள் முறையான அலுவலக வேலையைச் செய்வதற்கு எந்த வகையிலும் இடையூறு ஏற்படுவதில்லை.

கிராமங்களில் சென்று விவசாயிகளைச் சந்தித்து விசாரிப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும், விவசாய விரிவினை அலுவலர்களும், கிராம சேவகர்களும் உதவி புரிகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு பண்ணையைப்பற்றிய புள்ளி விபரங்களைச் சேகரிக்க ஒரு அட்டவணை தயார் செய்யப்பட்டிருக்கிறது. இதில் இரு பிரிவுகள் இருக்கின்றன. முதல் பிரிவில் பண்ணை விளை நிலத்தின் பரப்பு, குடும்பத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் நபர்கள், பண்ணையிலுள்ள கால்நடைகள், விவசாயக் கருவிகள், நீர்ப்பாசனத்திற்கான வசதிகள் ஆகியவை குறிக்கப்படும். இரண்டாம் பிரிவில் முந்திய ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் பரப்பும், மகசூலும், நடைமுறை சாகுபடியிலுள்ள குறைகளை நீக்கி திருந்திய விவசாய முறைகள் அனைத்தையும் கடைபிடிக்கும் வகையில் மாற்றுத் திட்டமும், அத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பொறுக்கு வித்துக்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், விவசாயக் கருவிகள் மேற்கூறியவற்றிற்கும் செலவுகளைப்பற்றிய விவரங்கள் ஆகியவை குறிக்கப்படும். சிபாரிசு செய்யப்பட்ட திருந்திய முறைகளைக் கடைபிடிப்பதால் எப்போதும் கிடைப்பதைவிட எதிர்பார்க்கும் கூடுதலான வருவாயும் இதில் இடம் பெறும். இவ்வாறு ஒவ்வொரு பண்ணைக்கும் தயாரிக்கப்படும் அட்டவணைகள் அந்தந்த பண்ணைச் சொந்தக்காரர்களிடம் சேர்ப்பிக்கப்படும். அத் திட்டத்தில் கண்டுள்ள சிபாரிசுகளைக் கடைபிடிப்பதன் மூலம் விவசாயிகள் பலனடையலாம்.

ஒவ்வோர் அணியின் உறுப்பினரும் தாங்கள் செய்யும் வேலை பற்றிய அறிக்கையை மாதந்தோறும் தங்கள் அணித் தலைவரிடம் சேர்ப்பிப்பர். இவ்வாறு ஒவ்வொரு அணியின் அறிக்கையையும் பரிசீலிக்க, விரிவினை வல்லுநர், உழவியல் துறைத் துணைப் பேராசிரியர், விவசாயப் பொருளாதாரத் துணைப் பேராசிரியர், ஆகியோரைக் கொண்ட ஒரு பரிசீலனைக் குழு (Scrutiny Committee) அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பண்ணைக்கும் உருவாக்கப்படும் திட்டத்தை இக் குழுவினர் ஆராய்ந்து பார்ப்பார்கள். இவ்வாறு ஆராயப்பட்ட மாத அறிக்கைகள் செயற்குழுவிற்கு (Action Committee) அனுப்பப்படும். அக் குழுவில் அணித் தலைவர்கள் அனைவரும் அங்கத்தினர்கள். இக் குழுவின் தலைவர் கல்லூரி முதல்வர் (Dean) ஆவார். கல்லூரித் துணை முதல்வர் (Associate Dean) உப தலைவர் ஆவார். வருட முடிவில் இச் செயற்குழு நடந்த வேலையைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யும்.

இக் குழுவின் அலுவல்களினால் விவசாயத் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்போர் விவசாயிகளின் சிக்கல்களையும், பிரச்னைகளையும் அறிய வாய்ப்பு ஏற்படுவதோடு விவசாய ஆராய்ச்சிகளின் முடிவுகள் விவசாயிகளுக்கு எம்மட்டில் உபயோகமானவைகளாக அமைந்திருக்கின்றன என்று கண்கூடாக அறிய உதவுகிறது. விவசாயிகளும் விவசாயத்தில் நவீன முறைகளைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு அரியதொரு வாய்ப்பை நல்குகிறது.

ஏர்வளம் பெருக்கி எதிரியை விரட்டுவோம்.

வீட்டுத் தோட்டங்களுக்கேற்றதொரு காய்கறி
கோவைக்காய்

(பி. சிமந்தனி, கே. ஆர். ராமன்—தோட்டக்கலைப் பிரிவு, கோவை.)

ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 10 அவுன்ஸ் காய்கறி தேவை. ஆனால் தற்போது நம் நாட்டில் ஆளொன்றுக்கு 3 அவுன்ஸ் கிடைப்பதற்குப் போதுமான காய்கறியே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தக் குறை பாட்டை நீக்கி மக்களுக்குப் போதிய அளவு சத்துள்ள உணவளிப்பதற்கு காய்கறி உற்பத்தியைப் பெருக்குவது மிகவும் அவசியம். பல ஆண்டுகள் பயன் தரும் காய்கறிகளைப் பயிரிடுவதால் ஆண்டு முழுவதும் பலன் கிடைக்கிறது. இவ்வகை காய்கறிகளில் ஒன்று கோவைக்காய்.

கோவைக்காயில் புரதம், இரும்புச் சத்து, வைட்டமின் 'சி' முதலியவை அதிக அளவில் காணப்படுகின்றன.

காய்கறி வகை.	உணவுச் சத்து			
	இரும்பு.	புரதம்.	வைடமின் 'பி'	வைடமின் 'சி'
பூசணிக்காய்	0·5	..	63	1
கத்தரிக்காய்	1·3	5	45	23
வெண்டைக்காய்	1·5	58	63	16
புடலங்காய்	1·3	160	63	..
கோவைக்காய்	1·4	260	..	28



வேலியின்மேல் படரவிடப்பட்ட கோவைக்காய் கொடி.

நாட்டு வைத்திய முறையாலான சிகிச்சைகளில் கோவைக்காய் உபயோகப்படுத்தப்படுகிறது. இக்கொடியின் வேர், தண்டு, இலை முதலியவை தோல் வியாதிகள், தொண்டை சம்பந்தப்பட்ட நோய்கள், நீர்ரோகம் முதலியவற்றிற்கு மருந்தாக பயன்படுகின்றன. கசப்பு மிகுந்த காய்கள் தரக்கூடிய தொரு வகை காட்டுச் செடியாக இம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் காணப்படுகிறது.

வீட்டுத் தோட்டங்களுக்கு

இக் காய் மிகவும் ஏற்றது. வீட்டைச் சுற்றியுள்ள வேலிகளில் இதைப் படர விடலாம். 5 அல்லது 6 அடி உயரமுள்ள பந்தல்கள் அமைத்து அவைகளிலும் வளர விடலாம். பந்தல்களை வீட்டுத் தோட்டத்திலுள்ள எருக்குழியின் மேல் அமைத்தால் குழிக்கு நிழல் தருவதோடு உரக்குழியைப் பார்வையிலிருந்து மறைக்கவும் ஏதுவாகும். தவிர வீட்டைச் சுற்றியுள்ள சுவர்கள், கிணறு, மாட்டுத் தொழுவம் போன்றவற்றின் அருகில் தட்டிகள் அமைத்து அவற்றின் மீதும், கோழிக்கூண்டுகளிலிருந்தால் அவற்றின் மீதும், வீட்டின் முகப்பில் கமான்கள் அல்லது பந்தல்கள் அமைத்து அவற்றின் மீதும், கொடிகளை வளர விடலாம்.

* ஜுலை மாதத்திலிருந்து டிசம்பர் மாதத்திற்குள்ளாக கொடிகளை நடவேண்டும்.

* 6 அல்லது 8 அடிக்கொன்ருக ஓரடி நீள, அகல, ஆழமுள்ள குழிகள் தோண்டி அவற்றில் 4 அல்லது 5 கணுக்கள் கொண்ட கொடிகளை குழியொன்றுக்கு இரண்டாக நடவேண்டும்.

* கோவைக்காயில் ஆண், பெண் கொடிகள் வெவ்வேருக இருக்கின்றன. பெண் கொடிகளிலிருந்து மட்டுமே குச்சிப் பதியன்களை சேகரித்தல் வேண்டும். ஆண் கொடிகள் அருகில் இல்லாமலே பெண் கொடிகள் காய்க்குமாதலால் ஆண் கொடிகளை நடுவது அவசியமில்லை.

* இரண்டு கணுக்கள் பூமியில் இருக்குமாறு கொடிகளை ஊன்ற வேண்டும்.

* நட்டு ஒரு மாதத்திற்குள்ளாக கொடி துளிர் விட்டு நன்கு வளர ஆரம்பிக்கும். வளரும் கொடிகளை மேற்கூறியபடி வேலிகளிலோ, தட்டிகளிலோ அல்லது பந்தல்களிலோ படர விட வேண்டும்.

உரமிடுதலும் நீர்ப்பாச்சுதலும்

நட்ட ஒரு மாதத்திற்குப் பின் செடி ஒன்றுக்கு 15-லிருந்து 20 ராத்தல் தொழு உரம் இடுவது நல்லது. காய்ப்பு ஆரம்பித்த பின் கொடியொன்றுக்கு ஒரு வருடத்திற்கு மூன்று முறை இரசாயன உரமிடவேண்டும். ஒவ்வொரு முறையும்,

அம்மோனியம் சல்பேட் 4—6 அவுன்சும்,
சூப்பர் பாஸ்பேட் 2—3 அவுன்சும் போட வேண்டும்.

* இவற்றை கொடிகளில் காய்ப்பு குறைவாக காணபடும் பருவங்களில் இட வேண்டும்.

* கொடியின் தண்டிலிருந்து ½—1 அடி விட்டு உரத்தைத் தூவி நன்றாக கொத்தி விட வேண்டும்.

* நல்ல காய்ப்புத் தர மழையில்லாத காலங்களில் வாரமொரு முறையாவது நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

பின்செய் நேர்த்தி

* களைகளை அவ்வப்போது எடுத்து விட வேண்டும்.

* வளரும் கொடிகளையும் அவற்றின் பக்கக் கிளைகளையும் தரையில் படரவிடாமல் குச்சிகள் ஊன்றி நேராக பந்தலை நோக்கி மேலே வளர விடவேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு

சில சமயங்களில் அசுவினி, சிலாம்புப் பூச்சி போன்றவைகளால் பாதிக்கப்படலாம்.

* இவைகளை பாலிடால் போன்ற மருந்துகளினால் தடுக்கலாம்.

* மருந்து அடித்து சுமார் பதினைந்து நாட்களுக்கு காய்களை உபயோகிக்காமல் எறிந்து விட வேண்டும்.

அறுவடை

* நட்டு ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களிலேயே கொடி பலன் கொடுக்க ஆரம்பிக்கும்.

* வருடம் முழுவதும் காய்ப்பு இருக்கும். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை காய்ப்பு மிகுதி.

* நட்டு ஆருவது மாதத்திலிருந்து மூன்று ஆண்டுகள் முடியும் வரை நல்ல பலன் தரும்.

மகசூல்

* ஒரு ஆண்டில் சுமார் 500-லிருந்து 600 காய்கள் வரை ஒரு கொடியிலிருந்து அறுவடை செய்யலாம்.

வீட்டுத் தோட்டங்களில் மூன்று கோவைக் கொடிகள் இருந்தால் ஒரு குடும்பத்தின் தேவைக்குப் போதுமான காய்களை ஆண்டு முழுவதும் அறுவடை செய்ய முடியும். கொடியொன்றிலிருந்து மூன்று அல்லது நான்கு நாட்களுக்கொரு முறை சுமார் 20 காய்கள் வரை கிடைக்கும். இந்த மூன்று கொடிகளின் பராமரிப்புக்கு மூன்று ஆண்டுகளுக்கு சுமார் ரூ. 20 செலவாகும். ஆனால் அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் காய்களின் மதிப்பு சுமார் ரூ. 45-க்கும் மேலாக இருக்கும்.

எக்கருக்கு வருடத்துக்கு 30,000 ராத்தல் காய்கள் வரை கிடைக்கும். முதல் வருடம் எக்கருக்கு ரூ. 2,700 வரையும், 2, 3-வது ஆண்டுகளில் வருடமொன்றுக்கு ரூ. 1,400 வரையும் செலவாகும்.

தென்னைக்கு உரமிட்டு உற்பத்தியைப் பெருக்குங்கள்

[வெ. ர. வரதராஜன், பி.எஸ்ஸி. (ஏஜி.),
ஆ. பிச்சையா, பி.எஸ்ஸி.(ஏஜி.).]

தென்னந் தோப்புகளில் உரமிட்டு, வருடம் மூன்று முறை உழவடை செய்வதால் மரமொன்றுக்கு ரூ. 5 முதல் 8 வரை அதிக லாபம் கிடைப்பதாக தஞ்சை மாவட்டத்தில் நடத்திய செயல் விளக்கங்கள் மூலம் தெரியவந்தது.

வருடத்தில் 24 ராத்தல் தழைச்சத்தும், 42 ராத்தல் மணிச்சத்தும், 60 ராத்தல் சாம்பல் சத்தும், சுமார் 2,000 தேங்காய்கள் விளையும் தென்னந்தோப்பிலிருந்து நஷ்டமாகிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

தென்னைக்குத் தேவையான உரங்கள்.

(மரமொன்றுக்கு.)

* (1) உர அளவுகள் :

அமோனியம் சல்பேட்	3—4	ராத்தல்.
எலும்புத்தூள்	2	,,
சாம்பல்	30—40	,,
குப்பை (அ) பசுந்தாளுரம் (அ) கம்போஸ்ட் (அல்லது)	100	,,
(2) அமோனியம் சல்பேட்	3—4	,,
சூப்பர் பாஸ்பேட்	2	,,
மூயூரியேட் பொட்டாஷ்	2½	,,
தழையுரம்	100	,,
(அல்லது)		
(3) கலப்பு உரம்	10	,,
தழையுரம்	100	,,

உரமிடும் முறை :

* மழைக் காலத்தில் ஜூன்-ஜூலை அல்லது அக்டோபர்-நவம்பர் மாதங்கள் உரமிட ஏற்ற காலம்.

* மரத்தைச் சுற்றி 3′—4′ தள்ளி பாதி வட்டத்திற்கு 1′ அகலம் 1′ ஆழக் கிடங்குகள் வெட்டி உரங்களைப் பரவலாகயிட்டு மூடவும்.

* தோப்புகளில் நவம்பரில் கொளுஞ்சியும், ஜூன்-ஜூலையில் சணப்பையும் விதைத்து தகுந்த பருவத்தில் மடக்கி உழுதல்வேண்டும்.

உரமிட்டதன் பலன் :

* முதல் வருடத்தில் 9 காய்கள் காய்த்த மரம் மூன்றும் வருடத்தில் 49 காய்கள் கொடுத்தன.

உரமிட வசதி :

* தென்னைக்கு உரமிட ரூபாய் 100 வரை உரங்கள் கடனாக அரசாங்கத்தால் அளிக்கப்படுகிறது.

கடன் வசதியையும், திருந்திய முறைகளையும் கையாண்டு தேங்காய் உற்பத்தியைப் பெருக்குங்கள்.

இன்று, என்றையும்விட, நாட்டிற்கு அதிக உணவு தேவையாக இருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு சவாலாகும். கிர்லோஸ்கர் டீஸல் என்ஜின்கள் இந்த சவாலுக்கு ஒரே விடையாகும்.

ஒவ்வொரு கிர்லோஸ்கர் என்ஜினும் நம்பிக்கைக்கும் பாத்திரமானதாகவும், சுலபமாக கையாளக்கூடியதாகவும், விற்பனைக்குப் பிறகு நேர்த்தியாக கவனிக்கப்படுகின்றதாகவும் இருக்கின்றது. இது மிக நம்பத்தகுந்ததும் கூட! கிர்லோஸ்கர் என்ஜின்களை உபயோகித்து நாட்டிற்கு அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள்.

கிர்லோஸ்கர்

இந்தியாவின் பயிர் நிலங்களிலிருந்து அதிக உணவிற்காக...!

டீஸல் என்ஜின்கள்

3 ஹார்ஸ் பவர் முதல் 15 ஹார்ஸ் பவர் வரை





மாதிரி AV 1 அண்டு JV 1
5 முதல் 7.5 ஹார்ஸ் பவர் வரை

மாதிரி 1 M
10 முதல் 12 ஹார்ஸ் பவர் வரை

மாதிரி AV 2 அண்டு JV 2
10 முதல் 15 ஹார்ஸ் பவர் வரை

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.,

எல்பின்ஸ்டன் ரோடு, புனு-3 (இந்தியா)

கரிசல் நிலத்தில் கம்பு மகசூலை அதிகரிக்கச் சிறந்த வழி!

எஸ். ராஜரத்தினம், வி. பாலசுப்பிரமணியன், வி. நடராஜன், டி. ஆர். நாராயணன்.

தமிழ்நாட்டில் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சுமார் நாலு லக்ஷம் ஏக்கர் பரப்புடைய நிலங்கள் கரிசல் நிலப் பாங்கானது. இப்பகுதிகளில் கம்பு, பருத்தி இரண்டும் மிக முக்கியமான மானாவாரிப் பயிர்களாகும். சிறு தானியங்களில், இப்பகுதியிலுள்ள விவசாயிகளின் முக்கிய உணவாக கம்பு ஒரு தனி இடத்தைப் பெறுகின்றது.

தற்சமயம் அநேக விவசாயிகள் உயர்ந்த ரகக் கம்பைப் பயிரிடுவதோ அல்லது கம்பிற்குத் தகுந்த ரசாயன உரமோ இடுவதில்லை. மானாவாரி கம்பிற்கு ரசாயன உரம் இடுவதென்பது பலருக்கு ஒரு விநோதமாகவும் இருக்கும்!

விவசாய இலாகாவினால் வெளியிடப்பட்ட உயர்ந்த ரக X.3 கம்பின் தரத்தையும் அறியவும் அதற்குத் தகுந்த அளவு ரசாயன உரத்தை இட்டு அதன் கூடுதல் பலனைப் பரிசோதிக்கவும் அரசினர் "கரிசல் நில ஆராய்ச்சித் திட்டம்" ஒன்றை ஏற்படுத்தி அது 1960-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. சாதாரண நாட்டுக்கம்பை கிராம உரத்துடன் (village compost) பயிர் செய்து அதன் அருகிலேயே உயர்ந்த ரக ஒட்டுக் கம்பை (X.3) நாட்டு உரத்துடன் ரசாயன உரமும் (அம்மோனியம் சல்பேட்) இட்டு பயிர் செய்து ஒப்பிட்டுப் பார்த்து பிந்திய முறையினால் கிட்டும் அதிக மகசூலை கணக்கிட்டு விவசாயிகளுக்கு ஆங்காங்கே இதைக் கண்கூடாக எடுத்துக் காட்டுவதே இத்திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.

இத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்பது இடங்களிலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு இடத்திலுமாக பத்து இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் 10 ஏக்கர் கரிசல் நிலப்பரப்பில் மேற்கண்ட ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன.

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை உழுதபின் 10 வண்டி (5 டன்) கிராம கம்போஸ்ட் உரம் இடப்பட்டு நிலத்தில் சேர்ந்தபின் நாட்டுக் கம்பு விதைக்கப்படுகிறது. இதன் அருகிலேயே இதுபோல் உழவிட்டு கிராம கம்போஸ்ட் உரம் சேர்ந்தபின், விவசாய இலாகாவால் வெளியிடப்பட்ட உயர்ந்த ரக X.3 என்னும் ஒட்டுக் கம்பு அம்மோனியம் சல்பேட் உரத்துடன் விதைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் ஏக்கர் ஒன்றுக்கு 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டு சல்பேட் உரம் தூவினபின் X.3 கம்பு விதைக்கப்பட்டு உழவால் மூடப்படுகிறது. எல்லா இடங்களிலும் பொதுவாக அம்மோனியம் சல்பேட்டுடன் பயிர் செய்யப்பட்ட X.3 உயர்ந்த ரக கம்பு ஆரம்பத்திலிருந்தே செழிப்பாக வளர்ந்து அதிக தூர் நன்றாகக் கட்டி உரமிடப்படாத நாட்டுக் கம்பைக் காட்டிலும் மிக்க அதிக மகசூலைத் தருகின்றது.

மேற்கண்ட சோதனைகள் தொடர்ந்து மூன்று வருடமும் கரிசல் நிலப்பரப்பில் 10 இடங்களில் பரிசோதிக்கப்பட்டு எல்லா இடங்களிலும் X.3 கம்பே உயர்வானது என்று நிரூபிக்கப்பட்டு இருக்கின்றது. சல்பேட் உரம் இடப்பட்ட X.3 கம்பு நாட்டுக் கம்பைவிட 1961-62, 1962-63 ஆண்டுகளில் சராசரி முறையே 38 சதவீதமும் 60 சதவீதமும் அதிக மகசூலைக் கொடுத்து இருக்கிறது. மகசூல் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வருடம்.	ஹெக்டேருக்கு இத்தனை கிலோகிராம் என்பது. X·3 ஒட்டுக் கம்பு சல்பேட் உரமிடப்பட்டது.	நாட்டுக் கம்பு கம்போஸ்ட் உரம் மாத்திரம்.
(10 இடங்களில் பயிர் செய்யப்பட்ட மகசூலின் சராசரி)		
1960—61	345	285
1961—62	623	452
1962—63	467	292
மூன்று வருட சராசரி	478	343
X.3 ஒட்டுக் கம்பின் அதிக மகசூல்		39%

ஏக்கர் ஒன்றுக்கு 100 ராத்தல் சல்பேட் உரமிடுவதால் ஏற்படும் அதிக செலவு ரூ. 17-50. ஆனால் ஒரு ஏக்கரில் கூடுதலாகக் கிடைக்கும் கம்பிலிருந்து அதிகப்படி வருமானம் ரூ. 40 — 60 வரை. இத்துடன் விவசாய உற்பத்தியைப் பெருக்கி நாட்டிற்காகத் தன் கடமையையும் ஆற்ற ஏதுவாகிறது.

முடிவுரை:

ஆகவே கரிசல் நில மானாவாரி கம்பு பயிரில் சல்பேட் உரம் இடப்பட்ட X.3 உயர் ரகக் கம்பு நாட்டு ரக கம்பை விட 39 சதவீதம் அதிக மகசூலைக் கொடுக்கிறது. மானாவாரிப் பயிரான கம்பிற்கும் சல்பேட் உரம் இடுவது நல்லது என்றும் நாட்டு ரகக் கம்பை விட விவசாய இலாகாவால் வெளியிடப்பட்ட X.3 கம்பு சிறந்த மகசூலைக் கொடுக்கிறது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது.

ஆகையால் நெல்லை, மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள கரிசல் நில விவசாயிகள் இனி கம்பு பயிரிடுங்கால், X·3 கம்பையே விதைக் கம்பாக உபயோகிக்குமாறும், அதற்கு ஏக்கருக்கு 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் இட்டு உற்பத்தியை அதிகரிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

X.3 (எக்ஸ். 3) கம்பு உரமிட்டு மகசூலைப் பெருக்குங்கள்.

சிறந்த பருத்தி சாகுபடி

(நா. வேங்கட்ராமன்.)

நிலத்தைப் பண்படுத்தல்.—தக்கபருவத்தில் இரும்புக் கலப்பையைக் கொண்டு ஐந்து அல்லது ஆறு முறை உழுது இறைவைப் பயிருக்கு ஏற்றவகையில் பார்க்கலப்பை உபயோகித்து சால்கள் அமைக்க வேண்டும். சால்களை 2' அல்லது 2½'—க்கு ஒன்றாக அமைப்பது நலம்.

எருவிடுதல்.—ஏக்கர் ஒன்றுக்கு 10 வண்டி வீதம் (சுமார் 5 டன்) நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு போட்டு பரப்ப வேண்டும். இதைத் தவிர பாசனப் பருத்திக்கு, சுலபமாகக் கிடைக்கும் சி.ஏ.என். உரம் ஏக்கருக்கு 200 ராத்தல் வீதம் அளிக்கவேண்டும். இதனை ஒரு தடவைக்கு 100 ராத்தல் வீதம் இரு தடவைகளில் அதாவது பயிர் மொட்டுக் கட்டும்போதும், பூ பிடிக்கும்போதும் அதாவது விதைத்து முறையே ஆருவது, பத்தாவது வாரங்களில் போட்டு நீர் பாய்ச்சினால் நல்ல பயன் கிடைக்கிறது. மானாவாரிப் பருத்திக்கு கம்போஸ்ட் எருவைத் தவிர ஏக்கருக்கு 100 ராத்தல் சி. ஏ.என். உரத்தை பருவ மழைக்கு முன்பு போட்டுப் பின்னர் விதைத்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது.

விதைப்பு.—சிறந்த தினுசு வித்துக்களை உபயோகித்தால் நல்ல லாபம் பெறலாம்.

பயிரிடும் காலம்.	சிறந்த பருத்தி ரகங்கள்.
1. புரட்டாசிப் பட்டம் (இறைவைப் பயிர்)	எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3.
2. புரட்டாசிப் பட்டம் (புஞ்சைப் பயிர்)	எம்.சி.யு. 1.
3. மானாவாரி கருங்கண்ணி பருத்தி (ஐப்பசி)	கே. 6 (பாண்டியன்).
4. மாசிப் பட்டம் (இறைவைப் பயிர்)	எம்.சி.யு. 2.
5. நஞ்சைத் தரிசு நிலங்களில் கோடையில் விதைப்பதற்கு குறுகிய காலப் பருத்தி (மாசிப் பட்டம்)	பி. 216 எப்.

சரியான முறையில் விதைத்தால் விதைகள் சரிவர முளைத்துத் தக்க பயன் கொடுக்கும்.

உகண்டா பருத்தி ரகங்கள் (எம்.சி.யூ. 1, எம்.சி.யு. 2, எம்.சி.யு. 3) விதைப்பதற்கு ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவை. கருங்கிளை நோயைத் தடுக்கும் பொருட்டு விதைக்கு முன்பு அக்ரஸான் என்ற பூஞ்சண மருந்தை 20 ராத்தல் விதைக்கு ஒரு அவுன்ஸ் (28 கிராம்) வீதம் நன்ருய்க் கலந்து பின் மாட்டுச் சாணம், செம்மண், தண்ணீர் சேர்த்துக் கலந்து சிறிதளவு தேய்த்து வெயிலில் பரவலாக வைத்துப் பின் விதைக்க வேண்டும். கருங்கண்ணிப் பருத்தியிலும், கரும்புள்ளி நோய் சமீப காலத்தில் காணப்படுவதால் இம்மருந்தைக் கையாளுவது நலம்.

உகண்டா பருத்திக்கு சாலுக்குச் சால் 2' அல்லது 2½' யும், குழிக்குக் குழி 9'' விட்டு விதையை ஊன்ற வேண்டும். குழிக்கு 3 விதை நடவேண்டும். இறைவைப் பருத்திக்கு விதைத்தவுடன் தண்ணீர் கட்ட வேண்டும். விதைத்த 3 அல்லது 4-ம் நாள் மறு நீர் பாய்ச்சவேண்டும். கருங்கண்ணிப் பருத்தியை மழை பெய்த பிறகு பதமான ஈரத்தில் அல்லது பருவமழைக்கு முன்பு புழுதியில் விதைப்பது வழக்கமாக இருந்து வருகிறது. சாலில் நடும் பருத்திக்கு சாலுக்குச் சால் 1½' யும் குழிக்குக் குழி 6 அங்குலமும் குழி ஒன்றுக்கு 2 செடிகளும் விட்டால் சிறந்த மகசூல் கொடுக்கிறது. 'கொர்ரு' கலப்பையை உபயோகித்தும் இவ்வாறு விதைக்கலாம்.

பின்செய் நேர்த்தி.—இறைவைப் பருத்தி விதை முளைத்து சுமார் 5 வாரத்தில் கொத்துக் களையெடுக்கும் பொழுது தூருக்கு 2 செடிகள் விடவேண்டும். விதைத்து சுமார் 70 நாட்களுக்குப் பின் ஏக்கருக்கு 100 ராத்தல் வீதம் இருமுறை சி. ஏ. என். உரமிட்டு மண் அணைத்துத் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை பருத்தி வெடிக்கும் வரை தண்ணீர் விட வேண்டும். மானாவாரிப் பருத்திக்கு தேவைக்கு ஏற்ப ஓரிருமுறை களையெடுக்கலாம்.

கலப்புப் பயிர் செய்தல்.—காலநிலை மாறுபாடுகளினால் ஒரு பயிருக்குத் தீங்கு ஏற்படினும் அதனால் ஏற்படும் நஷ்டத்தை மற்ற பயிர்கள் ஈடுசெய்யக்கூடும். இந்த அடிப்படையிலேயே மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய தென் ஜில்லாக்களில் பருத்தியுடன் கொத்துக்கடலை, மல்லி, உளுந்து முதலிய பயிர்களைக் கலந்து விதைத்து விவசாயிகள் நற்பயன் பெறுகின்றனர்.

பயிர் சுழற்சி.—பருத்திக்குப் பின் பருத்தியே பயிரிடப் பட்டால் நிலவளம் குன்றுகிறது. பருத்திக்கு முன் காராமணி, கொத்தவரை போன்ற பயறுவகைப் பயிர் ஒன்றை விதைத்தால் நிலவளம் குன்றுவதில்லை. இவற்றை தானியப் பயிருடன் கலந்தும் பயிரிடலாம். சோளம் போடும் இடங்களில் ஏக்கருக்கு 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட் போடுவது நல்லது.

பயிர்ப் பாதுகாப்பு.—காய்ப்புழு, இலைப்புழு, அசுவிணி, தத்துப்பூச்சி முதலியவற்றினால் பயிர் பெருத்த சேதமடைந்து மகசூல் மிகவும் குறைந்து விடுகிறது. இதைத் தவிர்க்க பூச்சி வந்தாலும் வராவிட்டாலும் கீழே கூறிய படி ஒரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது தேவைக்கு ஏற்ப மருந்தடிக்கவும்.

(1) தத்துப்பூச்சி, இதர பூச்சிகளைத் தடுக்க 250 மில்லி லிட்டர் என்டிரினை 80 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

(2) காய்ப்புழுக்கள் இதர பூச்சிகளைத் தடுக்கவும், கருங்கிளை நோய் மேலும் வராதிருக்கவும் 200 சி. சி. ஃபாலிடாலையும் 1 கிலோ 50 சத தாமிர பூசண மருந்தையும் 100 காலன் தண்ணீர் கலந்து தெளிக்கவும்.

(3) காய்ப்புழுக்களையும் இதர புழுக்களையும், சிலந்தியையும் தடுக்க பி.எச்.சி. 5 சத மருந்து 1½ கிலோகிராம், 50 சத டி.டி.டி. 1½ கிலோ கிராம், நீரில் கரையும் கந்தகம் 1 கிலோ கிராம், ஆகிய மூன்றையும் 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

(4) 200 சி.சி. ஃபாலிடாலை 100 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பருத்தி எடுத்தல்.—புரட்டாசிப் பட்டத்தில் விதைத்த பருத்தி தை மாதத்தில் வெடிக்க ஆரம்பிக்கும். மாசிப் பட்ட பருத்தி வைகாசி மாதத்தில் பலன்கொடுக்க ஆரம்பிக்கின்றது. நன்கு வெடித்த பருத்தியை காலை பனிப் பதத்தில் சருகு இன்றி சுத்தமாக எடுத்தால் பருத்தியின் தரம் குறையாமலிருக்கும். நல்ல பருத்தியையும், கெட்ட பருத்தியையும் தனித்தனியே பிரித்து சேமித்துவைக்க வேண்டும். வெயிலில் பருத்தியை காயவைத்து ஈரமின்றி சாக்குகளிலோ அம்பாரமாகவோ வைக்கலாம்.

கருங்கண்ணிப் பருத்தியில் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி 100 ராத்தல் பஞ்சும், கம்போடியா (உகண்டா) பருத்தியில் 300 ராத்தல் பஞ்சும் கிடைக்கிறது.

கே. 6 (பாண்டியன்) பருத்தியின் பூவும், பிஞ்சும் உதிர்வது தடுக்க "ஆல்பா நாப்தலின் அசெடிக் ஆசிட்"

[திரு. சி. கே. ராமச்சந்திரன், திரு. ஆர். எஸ். அன்னப்பன், திரு. டி. எஸ். ஏரன்.]

கருங்கண்ணிப் பருத்தியில் பூக்களும், பிஞ்சுகளும் உதிர்வது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகும். தென் பிராந்திய கரிசல் நிலங்களில் வளரும் கருங்கன்னிப் பருத்தி முக்கியமாக ஜனவரி 15-ம் தேதி முதல் பிப்ரவரி வரை உள்ள நாட்களில் மழைப் பெய்தாலும், தூறல் விழுந்தாலும், மேகங்கள் இருந்தாலும், சீதோஷ்ண நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டாலும் பூக்களும் பிஞ்சுகளும் உதிர்ந்து விடுவது உண்டு. பொதுவாக 15 நாட்களுக்கு மேற்பட்ட பிஞ்சு காய்கள் அதிகமாக விழுவதில்லை. அப்படி விழுந்தாலும் காய் புழுக்களால் (Boll worms) சேதப்படுத்தப் பட்டவைகளாக இருக்கும். கருங்கண்ணிப்பருத்திச் செடி பூக்கள் பூக்கத் தொடங்கி ஒரு மாதத்திற்கு பிறகு உண்டாகும் பூக்களும், கோடைப் பருவத்தில் உண்டாகும் பூக்களும் அதிகமாக விழுகின்றன. இது போக காலநிலை, மழை இவைகளாலும் பூக்களும், பிஞ்சுகளும் விழுவது மிகவும் சாதாரணம். கே. 6 (பாண்டியன்) பருத்தியில் இவ்வாறு பூக்களும், பிஞ்சும் விழுவது காரணமாக அதன் பலன் முற்றிலும் அடையப்படுவதில்லை. பூச்சிகளால் விழும் பிஞ்சுகளைத் தடுக்க பூச்சி மருந்துகளை உபயோகிக்கலாம். ஏனைய காரணங்களால் உதிரும் பூக்களையும், பிஞ்சுகளையும் தடுக்கும் ஆராய்ச்சி பல நாடுகளிலும் நடைபெற்று வருகிறது. அதன் பயனாக "ஹார்மோன்" (Harmone) என்ற உயிர்ச்சத்துக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் உபயோகத்தால் பயிர் வளர்ச்சி கட்டுப்படுத்தப் பட்டு, பூவும் பிஞ்சும் உதிர்வது தடுக்கப்பட்டு, மகசூல் அதிகரிக்கப்படுகின்றன. இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட உயிர்ச் சத்துக்களில் "ஆல்பா நாப்தலின் அசெடிக் ஆசிட்" (A napthalane acetic acid) பூக்களும், பிஞ்சுகளும் உதிர்வது தடுக்க பலவித பழச் செடிகளிலும், உலகத்தின் பல பாகங்களிலும் உபயோகப்பட்டு வருகிறது. "ஆல்பா நாப்தலின் அசெடிக் ஆசிட்" தெளிப்பதால் பஞ்சாபில் பி 216 பருத்தியில் 25 சதவீதமும், பெரியகுளம் சர்க்கார் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் எம்.சி.யு-1 பருத்தியில் 37 சதவீதம் அதிகப்படியான மகசூல் கிடைக்கப்பட்டுள்ளன.

1962-63-ம் வருடத்தில் கோவில்பட்டி சர்க்கார் பண்ணையில் கருங்கண்ணித் திட்டத்தில் கே. 6 (பாண்டியன்) பருத்தியில் " ஆல்பா நாப்தலின் அசெடிக் ஆசிட் " தெளித்து ஆராய்ச்சி நடைபெற்றது. இந்த உயிர்ச்சத்து ஒரு மில்லியன் பாகங்களுக்கு பத்து பாகமாக (Ten parts per million) தண்ணீரில் கரைத்து கீழ்க்கண்ட மூன்று விதங்களில் தெளிக்கப்பட்டன:—

1. கே. 6 (பாண்டியன்) விதைத்து 56-வது நாளில் உயிர்ச்சத்து ஒரு முறை தெளிக்கப்பட்டது.

2. விதைத்து 60-வது நாளில் ஒரு முறை உயிர்ச்சத்து தெளிக்கப்பட்டது.

3. விதைத்து 60-வது நாளில் ஒரு முறையும் 75-வது நாளில் மறுமுறையும் உயிர்ச்சத்து தெளிக்கப்பட்டது.

மேற்கூறிய மூன்று பிளாட்டுகளில் தெளிக்கப்பட்ட உயிர்ச்சத்தின் தராதரத்தைக் கணக்கிட, உயிர்ச்சத்து தெளிக்காத ஒரு பிளாட்டும் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பிளாட்டுகளில் உற்பத்தியான பருத்தியில் பருவகால பருத்தி தனியாகவும், கோடைப் பருத்தி தனியாகவும் சேகரிக்கப்பட்டது. கீழ் கண்ட அட்டவணையில் அதன் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

கே. 6 (பாண்டியன்) பருத்தியில் "ஆல்பா நாப்தலின் அசெடிக் ஆசிட்" தெளிப்பதால் கிடைக்கும் மகசூல்.

விவரம்.	ஒரு ஏக்கரில் கிடைத்த பருத்தி மகசூல் கிலோ கிராமில். பருவகாலம்.	கோடைகாலம்.	மொத்தம்.	உயிர்ச்சத்து தெளிக்காததை விட மகசூல் (சதவீதம்).
(1)	(2)	(3)	(4)	(5)
56-ம் நாளில் தெளித்தது.	414	99	513	98
60-ம் நாளில் தெளித்தது.	488	120	608	116
60-ம் நாளிலும் 75-ம் நாளிலும் தெளித்தது.	423	103	526	100
உயிர்ச்சத்து தெளிக்காதது.	454	71	525	100

உயிர்ச்சத்து தெளிக்காததைவிட 60-ம் நாளில் உயிர்ச்சத்து "ஆல்பா நாப்தலின் அசெடிக் ஆசிட்" தெளித்ததில் 83 கிலோ கிராம் (அதாவது 16 சதவீதம்) அதிக பருத்தி மகசூல் கிடைத்துள்ளது. இரண்டு முறை (60-ம் நாளிலும் 75-ம் நாளிலும்) தெளிப்பதில் அதிக மகசூல் இல்லை. 56-ம் நாள் தெளிப்பதில் சிறிது மகசூல் குறைந்துள்ளது. ஆகவே இந்தியாவில் பஞ்சாபிலும், பெரியகுளத்திலும் "ஆல்பா நாப்தலீன் அசெடிக் ஆசிட்" தெளிப்பு ஆராய்ச்சியில் கண்ட விவரங்களுக்கு ஒப்பாக கே. 6 (பாண்டியன்) பருத்தியில் மேற்கூறிய உயிர்ச்சத்து ஒரு முறை 60-ம் நாளில் தெளிப்பதால் அதிக பருத்தி மகசூல் கிடைத்திருக்கிறது.

நெருக்கடி தீர பெருக்குவீர் பருத்தியை!

உங்கள் நெற்பயிருக்கு

பொட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு.   த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

"பாலகன் முறை" மணிலா சாகுபடி

(பி. இருஷ்ணசாமி, ஜி. கோவிந்ததாஸ், பி. சித்தாராமன், பி. எஸ். விஸ்வநாதன், சையது நஸீர் மீரான், பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணை, திண்டிவனம்.)

1960-ம் ஆண்டு கோடை சாகுபடியில் (இறைவைச் சாகுபடி) ஏக்கருக்கு 103 மூட்டை மணிலா அறுவடை செய்தார் திரு. எ. பி. பாலகன். இவர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த மூக்கூடல் கிராமத்து பெரிய விவசாயி மட்டுமல்ல, பீடி தொழில் அதிபருமாவார். அவரது சிறந்த சாகுபடியில் பயிரின் சிறந்த வளர்ச்சி, ஏராளமாகக் கிளைகள் விடுதல், நிறைய பூத்து, காய்ப் பிடித்தல் போன்ற உண்மைகளைக் கண்டார்.

இம்முறை திண்டிவனம் பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணையில் 1961, 1962 ஆண்டுகள் பண்ணை முறையுடன் ஒப்பிட்டு பரிசோதனை நடத்தப்பட்ட விவரம் கீழ்க் கண்டவை :

சாகுபடி விவரம். (1)	''பாலகன் முறை'' (2)	''இலாகா முறை'' (3)
நிலம் தயாரித்தல்.	11 நெ. கூப்பர் கலப்பையால் 10 முறை உழுதல்.	11 நெ. கூப்பர் கலப்பையால் 4 முறை உழுதல்.
உரமும் உரமிதேலும் ..	அடியுரம் 35 வண்டி தொழு எரு, 280 ராத்தல் சூப்பர், 112 ராத்தல் முயூரி யேட் ஆ.ஃப் பொட்டாஷ்.	அடியுரம் 15 வண்டி தொழு எரு, 224 ராத்தல் சூப்பர் 112 ராத்தல் முயூரி யேட் ஆஃப் பொட்டாஷ்.
விதையும் விதைத்தலும்	1. 100 ராத்தல் விதை	1. 120 ராத்தல் விதை.
இடைவெளி	2. 18″ × 18″	2. 9″ × 6″
பின்செய் நேர்த்தி	மூன்று முறை களைக் கொத்தல் அதிக கிளைகள் வடித்தல்.	இரண்டு முறை களைக் கொத்தல்.
நீர்ப்பாசனம்	எட்டுமுறை	ஐந்து முறை.
பயிர்ப் பாதுகாப்பு	தடுப்பு முறையாக ஆறு முறை பாலிடால் தெளித்தல்—வளர்ச்சியைத் தூண்டி விட்டன.	..

சாகுபடி விவரம் (1)	"பாலகன் முறை" (2)	"இலாகா முறை" (3)
விளைச்சல்	2,250 ராத்தல்	1,800 ராத்தல் மணிலா
	12,670 கொடி	10,570 கொடி.
விளைச்சலின் மதிப்பு	ரூ. 500	ரூ. 475
சாகுபடி செலவு	ரூ. 422	ரூ. 219
நிகர லாபம்	ரூ. 78	ரூ. 256

இச்சோதனைகளிலிருந்து "பாலகன் முறையின்" மூலம், இலாகா முறையை விட அதிக பலன் கிடைத்தது, அதிகப்படியான வருவாய் அதிகப்படியான செலவுக்கு ஈடு கொடுக்கவில்லை என்று தெரிகிறது.

பசுந்தாள் உர உற்பத்தியில் மணியாச்சி பஞ்சாயத்தின் முயற்சி

1963-ம் ஆண்டு மே மாதக் கடைசியில் 10 ஏக்கரில் தக்கைப் பூண்டு விதைக்கப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் ரூ. 160 பெறுமான தழையும் ரூ. 200 பெருமானமுள்ள 4 மூட்டை விதையும் சேகரிக்கப்பட்டது. இதனல் பஞ்சாயத்துக்கான செலவு ரூ. 193-05, வரவு ரூ. 448-70, நிகர லாபம் ரூ. 255-65.

எல்லா பஞ்சாயத்துக்களும் பசுந்தாளுரத்தில் அக்கறை காட்டி தங்கள் எருவளத்தையும், பண வளத்தையும் பெருக்கிக் கொள்ள நிறைய வாய்ப்பிருக்கிறது.

மணியாச்சி பஞ்சாயத்து, ஒட்டபிடாரம் யூனியனைச் சேர்ந்தது, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது.

	ரூ.
விதைப்பதற்கும் விதைக்கும்	133.05
விதை சேகரம் செய்ய	60.00
மொத்தச் செலவு	193.05
வரவு	
பஞ்சாயத்து யூனியன் விவசாய மான்யம்	88.70
தழை விற்பனை மூலம்	160.00
4 மூட்டை விதை விற்பனை மூலம்	200.00
	448.70
நிகர லாபம் 448.70 — 193.05 =	255.65
ஒரு ஏக்கருக்கு	25.56
சுமார்	25.50

பயன் தரும் பயறு

(சி. கே. ராசகோபாலன், ஆர். சம்பந்தம், பயறுவகை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை-3.)

சத்தும் சுவையும் ஒருங்கே நிறைந்தது பயறு வகைகள். தேக பலத்திற்கும், வளர்ச்சிக்கும் தேவைப்படுவது. தினமும் உண்ணும் உணவில் 3 அவுன்ஸ் குறையாது பயறு வகைகள் இருத்தல் வேண்டும்.

பயிறு வகைகள்

* துவரை, உளுந்து, பாசிப்பயறு, கொள்ளு, மொச்சை, காராமணி முதலியன தானியங்களாக பக்குவ படுத்தி உண்ணப்படுகின்றன.

* பீன்ஸ் வகைகள், அவரை, தட்டைப்பயறு, கொத்தவரை முதலியவற்றின் இளம் காய்கள் சமையலுக்குகந்தவை.

பயறு வகைகளின் சிறப்பு

* புரதம் நிறைந்த மாமிசம், மீன் முதலிய வகைகளுக்கு ஈடான பயறு வகைகள் எல்லா மக்களும் வாங்கி உபயோகிக்க ஏற்றவை.

* தேக வளர்ச்சிக்குத் தேவையான கார்போ ஹைட்டிரேட்டு, பாஸ்வரம், இரும்புச் சத்துக்கள், விட்டமின்கள் கொண்டது பயறு வகைகள்.

* முளைகட்டின பயறு வகைகளில் விட்டமின் ‘ சி ’ நிறைய இருக்கிறது.

பயறு வகைகளின் சத்துப் பொருட்கள் பட்டியல்.

தானியம்.	புரதம்.	கார்போ ஹைட்ரேட்.	கொழுப்புச் சத்துக்கள்.
(1)	(2)	(3)	(4)
துவரை (பருப்பு)	22·3	51·2	1·7
உளுந்து (பருப்பு)	24·0	60·3	1·4
பாசிப் பயறு	24·0	56.6	1·3
கடலே	17·0	61·0	5·3
மொச்சை (பருப்பு)	24·4	57·8	1·5
காராமணி	24·6	55·7	0·7
கொள்ளு	24·0	57·3	1·3
அரிசி	8·5	78·0	0 6
கோதுமை	13·5	68·4	1·2
சோளம்	9·3	72·3	2·0
கம்பு	11·6	67·1	5·0
ராகி	7·1	76·3	1·3

இதர உபயோகங்கள்

* இதன் ‘பொட்டு’ அல்லது ‘பூசா’ ஒரு நல்ல கால் நடைத் தீவனம்.

* நிலவளம் பெருக்கும் பசுந்தழை உரம்.

* மண் அரிப்பு தடுப்பு பயிராகவும் வளர்க்கலாம்.

* கால்நடைத் தீவனத்திற்கு தனிப் பயிராகவும் சாகுபடி செய்யலாம்.

கூட்டுப் பயிராகவும், தனிப் பயிராகவும், மானாவாரியிலும், இறைவையிலும் சுலபமாக சாகுபடி செய்யலாம்.

தற்பொழுது 12 லக்ஷம் ஏக்கர்களில் பயறு வகைகள் தமிழ் நாட்டில் பயிரிடப்படுகின்றன. தேவையைப் பூர்த்தி செய்ய இன்னும் அதிகமாக பயிர் செய்யவேண்டும்.

உயர்தர பொறுக்கு ரகங்களுக்கும், சிறப்பான சாகுபடி குறிப்புகளுக்கும் பயறு வகை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை-3 என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

“பயன் தரும் பயறு வகைகள் நிறைய பயிரிடுங்கள்”.

விளைச்சலின் முழுப் பலனையும் பெற உரிய காலத்தில் அறுவடை செய்யுங்கள்

(போ. போத்திராஜ், நெல் ஆராய்ச்சிப் பண்ணை, அம்பாசமுத்திரம்.)

நெல் மணிகள் விளைந்தபின்னர் அறுவடைசெய்ய காலம் தாழ்த்தும் ஒவ்வொரு நாளுக்கும் 1 சதவீதம் அரிசி நொறுங்கிவிடுகின்றது. மணிகள் முதிர்ச்சியடைய ஒருவாரத்திற்கு முன்னதாகவே அறுவடை செய்தால் விளைச்சலில் கால் பாகம் நொறுங்கி விடுகின்றது. அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டதொரு முடிவு இது. இதனால் பொருள் நஷ்டத்தோடு அரிசியின் தரமும் பாதிக்கப்படுகிறது. அறுவடைநாளைக் குறிப்பதில் விவசாயிகள் அதிக அக்கரை செலுத்தவேண்டும்.

தரமான நெல் பெறுவது எப்படி ?

* நெற்பயிர் முற்றிவரும்பொழுது நெல் மணிகள் பால் வைத்து இறுக ஆரம்பிக்கும் தருணத்தில் வயலில் தண்ணீர் வடிய வைத்தல் வேண்டும்.

* இதனால் நெல் மணிகள் ஒரே காலத்தில் முதிர்ச்சியடைகின்றன.

* நெல்லும் அரைக்கப்படும்பொழுது அரிசி நொறுங்கி குருணையாகாது ஒரே மாதிரி பளபளப்பும், தரமும் உடையனவாக இருக்கின்றன.

* மண்ணின் தன்மையைப் பொறுத்து தண்ணீரை வடிய வைக்கும் காலம் மாறுபடும்.

* அதிக நாள் தண்ணீர் தேங்கி நிற்கும் கரிசல் மண் நிலங்களில் சற்று முன்னதாகவே வடிய வைத்தல் வேண்டும்.

* நெற்கதிர் நன்ருக முதிர்ந்த பின்னும் கதிரின் அடிப்பாகத்தில் சில நெல் மணிகள் பச்சையாயிருக்கும். ஆனால் இப்பச்சை நிற மணிகள் நன்ருக முதிர்ந்து இருக்கும். இப்பச்சைமணிகளை சுத்தம் செய்து பதர் நீக்கும் பொழுது அகற்றி விடலாம். காலம் கடந்து செய்யும் அறுவடை பெருத்த நஷ்டமுண்டாக்கும்.

எப்பொழுது அறுவடை செய்யவேண்டும்?

* நெல் மணிகள் 19 முதல் 21 சதவீதம் வரை ஈரமிருக்கும் பருவமே அறுவடைக்கு உகந்த பருவம்.

* நெற்பயிர் பூத்த நாளிலிருந்து 35 நாட்களில் முதிர்ந்து விடுகின்றது என்று கொள்ளலாம்.

நெற்பயிரை உரிய பருவத்திற்கு முன்பே அறுவடை செய்து பின்னர் எவ்வளவுதான் நெல் மணிகளைக் காய வைத்தபோதிலும் அரிசியின் தரம் உயர்வதில்லை. நெல் மணிகளை சரியாக விளையுமுன்னும், விளைந்த பின் காலம் கடந்து அறுவடை செய்வதாலும், நெல் அரைக்கப்படும்பொழுது நொறுங்கி குருணையாகி பொருள் நஷ்டமும், பண நஷ்டமும் எற்படுகிறது. இக் குறைகளை நீக்க உரிய பருவத்தில் அறுவடை செய்யுங்கள்.

பிரஸ்மட் கம்போஸ்ட் உரம்

க. நாராயணன், பி.எஸ்ஸி., (விவசாயம்)
இலக்குமாங்குடி.

'பிரஸ்மட்' என்பது சர்க்கரை ஆலேகளில் வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களில் ஒன்று.

* இதனைக் கம்போஸ்டாகச் செய்த உரம் கரும்புப் பயிருக்கு நல்ல பலன் அளிக்கிறது.

* பிரஸ்மட் கம்போஸ்ட் உரத்தை தொழு உரத்திற்கு பதிலாக இடலாம்.

* கரும்புக்கு எக்கர் ஒன்றுக்கு 10–15 டன் போட்டால் சுமார் 5–10 டன் அதிக மகசூல் கிடைக்கிறது.

* இதில் 1·5 சதவீதம் தழைச்சத்தும், 5·0 சதவீதம் தானியச்சத்தும், 0·7 சதவீதம் சாம்பல் சத்தும் அடங்கியுள்ளன.

* பிரஸ்மட்டின் விலே மிகவும் குறைவு. ஒரு டன்னுக்கு ரூ. 1-லிருந்து 2 வரையே.

பிரஸ்மட் கம்போஸ்ட் தயாரிப்பது எப்படி ?

நன்ருக உலர்ந்த பிரஸ்மட் மூன்று பாகத்தோடு (எடையில்) ஒரு பாகம் கரும்பு சோகையை சேர்த்து ஒரு மேடான பாகத்தில் குவித்துக்கொள்ளவேண்டும். இதன் மேல் நீரில் கெட்டியாகக் கரைத்த சாணத்தைத் தெளித்து குவியலே நன்ருகக் கலக்க வேண்டும். பின்பு இவற்றை மூன்று அடி உயரத்திற்கும் நீளவாக்கில் சௌகரியமான அளவிற்கும் பரப்பவேண்டும். 10–15 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை சாணப்பால் கலந்து குவியலே அடியிலிருந்து மேற்புறம் கலக்கி முன்பு செய்ததுபோல் மூன்று அடி உயரத்திற்கு பரப்ப வேண்டும். குவியலின் வெளிப் பாகத்தை மண் சாந்தால் பூசவேண்டும். 6–8 மாதங்களில் சாம்பல் நிறமான மக்கின பிரஸ்மட் கம்போஸ்ட் உரம் தயாராகிவிடும். வயலில் எரித்து விடும் சோகைகளே விலே கொடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லே.

எனவே, கரும்பு விவசாயிகள் பிரஸ்மட், கரும்பு சோகைகளே கம்போஸ்ட் உரம் செய்து மிக குறைந்த செலவில் அதிக மகசூலே சுலபமாக பெறலாம்.

நிலத்திற்கு உரமிடவும்,
உரமிட்டு உற்பத்தியை பெருக்கவும்.

மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினேவூட்டுகிருேம்.

1964-ம் ஆண்டு மார்ச் மாதத்தோடு முடிவாகும் "மேழிச் செல்வம்" மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா எண், மாதம் ரீதியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

மாவட்டம்.	சந்தா எண் ஆரம்பம்.	சந்தா எண் முடிவு.
செங்கல்பட்டு	2779	2837
தென் ஆற்காடு	4361	4444
வட ஆற்காடு	8551	8699
தஞ்சாவூர்	9134	9170
திருச்சி	6823	6863
சேலம்	5065	5196
மதுரை	2212	2294
கோயமுத்தூர்	2460	2682
இராமநாதபுரம்	1826	1881
திருநெல்வேலி	6563	6757
கன்னியாகுமரி	1249	..
நீலகிரி	5179	..
உள்ளூர் சந்தா	2273	2293

மேழிச் செல்வம் தொடர்ந்து பெற உடனடியாக சந்தா தொகையாகிய ரூ. 3 (மூன்று மட்டும்) அருகிலுள்ள விவசாய அலுவலகத்திலாவது அல்லது பணத்தை மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பியாவது புதுப்பித்துக் கொள்ளுங்கள். புதுப்பிக்கும்போது தவருமல் சந்தா எண்ணே அதில் குறிப்பிடவும். உங்கள் நண்பர்களேயும் சந்தாதாரர்களாக்குங்கள்.

வேளாண்மைத்துறை நெறியாளர்,
தபால்பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னே-5.

சந்தா விவரம் :—

	ரூ.	ந.பை.
தனிப்பிரதி விலே	0	25
சித்திரை மலர்	0	50
ஆண்டு சந்தா	3	00

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலேகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் சந்தா எண்ணேத் தெளிவாகக் குறிப்பிட்டு மேல்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலேயத்திஞல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னே விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்

(No. C. 1206691/61—14—4—1962)

(சென்னே விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள்

1. சராசரி அழுத்தத்தில் வேலே செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எ∴கு தகட்டிஞல் செய்யப் பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாது காப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூஸ் வாத்து கழுத்து போன்ற வளேந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலே விவரம்

(சென்னே அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலே)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	**290** ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	**280** ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு	**280** ரூபாய்

செயலாளர்கள்

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னே, மைசூர் விநியோகஸ்தர்கள்

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

இரும்புக் கலப்பைகளின் கொழுக்களை கூர்மையாக்கும் முறைகள்

(கே. ஆர். சுவாமிநாதன், ஆர். சுப்ரமணியம், விவசாய பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இரும்பு கலப்பைகளில் காணப்படும் கொழுக்கள் பல தரப்பட்ட இரும்பு கலவைகளில் தயாரிக்கப்படுகின்றன. அம்மாதிரி உபயோகிக்கப்படும் இரும்புகளும் அதன் குணங்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

1. **குளிர்பதனிட்ட வார்ப்பிரும்பு (Chilled cast iron).**—இது மலிவானது. மணற்பாங்கான நிலத்தில் ஏற்படும் அதிகப்படியான தேய்மானத்தால் பாதிக்கப்படுவதில்லை. இவ்வகை இரும்பினாலான கொழுக்களை காய்ச்சி அடிக்க முடியாது.

2. **மிருதுவான மையங்கொண்ட எஃகு (Soft centre steel).**—அதிக அளவு கரி கலந்திருக்கும் எஃகும் அமைந்திருக்கும் இரண்டு அடுக்குகளில் குறைந்த கரி கொண்ட எஃகு இரும்பினால் ஆனது. வார்ப்பிரும்பில் அதிகமாக ஒட்டிக்கொள்ளும் களிமண் நிலங்களில் இவ்விரும்பை உபயோகிக்கலாம். ஏனெனில் அதிகமாக களிமண் ஒட்டாது. இந்த இரும்பு தேய்மானத்தினால் மெருகேறும்.

3. **புடமிட்ட எஃகு (Crucible iron).**—கற்பாங்கான நிலங்களுக்குகந்தது. களி பிடிப்பில்லாத இடங்களிலும் உபயோகிக்கலாம். இது மிருதுவான மையங்கொண்ட எஃகை (Soft centre steel) போல அவ்வளவு கடினமானதல்ல. இதில் தேய்மானத்தால் மெருகேறாது.

4. **வார்பிட்ட கலவை எஃகு (Cast alloy steel).**—இது விலையுயர்ந்தது. இலகுவில் தேய்ந்துபோகாமல் மற்றும் உடைந்து போகாமலிருக்க தேர்ந்த உலோக கலவைகளிலானது. குரோமியம், கோபால்ட், டங்ஸ்டன் அதிக கரி கலந்த மாங்கனீஸ் மற்றும் சிலிகான் ஆகிய கலவைகள் கொழுவிற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன.

மழுங்கிய கொழுவை ஏன் தீட்டி கூராக்க வேண்டும் ?

இரும்புக் கலப்பையில் 1 சால் உழ 100 பங்கு சக்தி உபயோகப்படுத்தினால் அதில் 55 பங்கு மண்ணை வெட்டுவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. 35 பங்கு மண்ணுக்கும் கலப்பைக்கும் ஏற்படும் உராய்வினால் செலவாகிறது. மீதி 10 பங்கு சால் மண்ணை புரட்டிப்போடுவதில் உபயோகப்படுத்தப்படுகிறது.

சால் ஓட்டும்போது பூமியை வெட்டுவதற்கே சக்தியின் பெரும் பகுதி செலவிடப்படுவதால் கலப்பையின் கொழு கூர்மையாக இருக்கவேண்டியது மிக அவசியம். வெறும் கூர்மையாக மட்டுமல்ல சரியான முறையில் தீட்டப்பட்டதாக இருக்கவேண்டும். இவ்வாறிருந்தால் 6 அல்லது 6·7 பங்கு சக்தி குறைவாக செலவாகிறது.

கொழுவை எவ்வாறு தீட்டவேண்டும் ?

கொழுவை அதன் நுனிப்பாகத்தின் மேல்புறம் சாணைக்கல்லில் படும்படி வைத்து செங்குத்தாக தீட்ட வேண்டும். கொழுவின் நுனி செங்குத்தான கோண மடைய வேண்டும். இம்மாதிரி செங்குத்தான கோணத்தில் தீட்ட முடியாத அளவு கொழு தேய்ந்து போயிருந்தால் அக் கொழுவை உபயோகிக்க தகுந்ததல்ல என்று தள்ளிவிட வேண்டும்.

கொழுவை கூராக்குவதற்கு எந்தப் பகுதியை கூராக்க வேண்டுமோ அந்தப் பகுதியை தணலில் இட்டு காய்ச்ச வேண்டும். மற்ற பகுதிகள் தணலில் படக்கூடாது. ஏனென்றால் கொழு முழுவதும் நீண்டு விடும். இதற்காக அதிக அகல தணலை தவிர்க்கவேண்டும். கொழுவை அடுப்பின் மேல் படுக்கை வசமாக கொழுவின் ஓரம் தணலிலும் மற்ற பகுதிகள் கரியிலும் இருக்குமாறு வைக்கவேண்டும். இதனால் மற்ற பகுதிகளில் சூடேறாமல் இருப்பதுடன் அதன் உருவமும் மாறாது இருக்கும். ஒவ்வொரு முறையும் இரண்டங்குல அகலத்திற்கே கொழுவை காய்ச்சவேண்டும். ஓரத்திலிருந்து காய்ச்ச ஆரம்பித்து முன் பாகத்தில் முடிக்கவேண்டும். கொழுவை ஒரு போதும் செங்குத்தாக தணலில் காய்ச்சக்கூடாது.

சுத்தியால் அடிக்க ஆரம்பிக்கு முன்பு எவ்விதமான உருவில் கொழு வேண்டுமோ அந்த உருவத்தை தரையில் வரைந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் அந்த உருவத்தில் புது கொழு அமையும்.

கொழுவின் ஓரம் பழுத்து சிவப்பு நிறம் அடைந்த உடனே அடிக்க ஆரம்பிக்க வேண்டும். கொழு ஆறி சாதாரண நிலைக்கு வருவதற்கு முன் அடித்து முடிக்க வேண்டும். சுத்தியால் கொழுவின் மேல் பக்கத்திலிருந்து அடித்துக்கொண்டு வரவேண்டும். அவ்விதம் அடிக்கும்போது கொழுவின் கீழ் ஓரம் நன்றாக பணையின் மேல் பதிந்து இருக்கவேண்டும். அப்போதுதான் வெட்டு முனை கீழ்புறம் அமையும். அதுமட்டுமின்றி கெட்டி எஃகு உள்ளே உள்ள மெது எஃகை சுற்றி அமையும். அடிக்க அடிக்க தரையில் வரைந்துள்ள உருவத்தோடு ஒப்பிட்டு பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் புதிய கொழுவிற்கு சரியான உருவம் அமையும். இம்முறையை வெட்டுமுனையை அடிக்கும் வரை கடைப்பிடிக்க வேண்டும்.

கொழுவை பணையின்மீது வைத்து கொழு முனையை 1/8″ முதல் 3/16″ வரை கீழ்நோக்கி சுத்தியின் உதவியால் வளைக்க வேண்டும். அவசியமானால் ஒரு எஃகு துண்டை கொழு முனையின் மேல் "வெல்டிங்" முறையால் ஒட்டி வைக்கலாம்.



புடமிட்ட இரும்பு (crucible steel) கொழுவையும் இதே முறையில் அடுப்பு தணலில் காட்டி காய்ச்சி அடித்து வெட்டு முனையை தீட்ட வேண்டும்.

வார்ப்பிட்ட கலப்பு எ.ஃ.கு கொழுவை இம்மாதிரி தீட்டிய பின், அதன் வெட்டு முனையில் சில (trace elements) உலோகங்கள் சேர்த்து அதை பலப் படுத்தலாம். (crucible steel) புடமிட்ட எ.ஃ.கு கொழுவின் மேல் பாகத்தை அடிப்பதில் உருமாறிவிடும் என்ற பயம் கிடையாது.

ஒருவேளை தீட்டப்படும்போது உருமாறிவிட்டாலோ அல்லது அதிக சூட்டில் உருகிவிட்டாலோ அதை குளிர்ந்து கெட்டியாகுமுன் இளஞ் சூட்டிலேயே தட்டி சரிப்படுத்தி விடலாம்.

கொழுவின் உறுதி அதை சீராக காய்ச்சுவதில்தானிருக்கிறது. கொழுவை அடித்து உருமாற்றுமுன் அதன் முழு நீளத்திற்கும் 1475° எ ஃப் முதல் 1565° எ ஃப் உஷ்ணத்திற்கு அதை காய்ச்சி அதன் மேலுள்ள கெட்டியான பாகங்களை மெதுவாக்க வேண்டும். கொழுவை அடித்து கூராக்கும்போது அதன் உஷ்ணம் 1750° எ ஃப் லிருந்து 1650° எ ஃப்க்குள் இருக்கவேண்டும். நல்ல பழுத்த சிவப்பு நிறம் மங்கியவுடன் அடிப்பதை நிறுத்தி விட வேண்டும். நீலநிற சூட்டில் உஷ்ணப்படுத்துவதையோ அடிப்பதையோ தவிர்க்கவேண்டும்.

கொழு செந்நிற சூட்டிலிருக்கும்போது அதை தண்ணீரில் அமிழ்த்தக்கூடாது. அதை அதிகம் காற்றில்லாத ஓரிடத்தில் சூடு தணியும்வரை வைத்திருக்கவேண்டும். இரும்பை உறுதிப்படுத்த திரும்பவும் விளிம்பின் நீளம் பூராவும் 3/4" முதல் 1½" வரை அகலத்திற்கு 1475° எ ஃப் வரை காய்ச்சவேண்டும். இதற்கு கொழுவை செங்குத்தாக தணலில் வைக்கவேண்டும். குளிரவைக்க சுடு தண்ணீரில் அமிழ்த்த வேண்டும். உலோகம் உரிந்தோ அல்லது பிளவுகண்டோ போகாமலிருக்க நன்றாக சாதாரண நிலைக்கு ஆறியதும் முழுவதுமாக தண்ணீரில் அமிழ்த்துவதற்கு முன் அதிகமாகவும் குளிர்ந்துவிடக் கூடாது. இல்லாவிட்டால் அது தேவையான அளவு கடினத் தன்மை அடையாது. கொழுவின் உஷ்ணத்தை பிரகாசமான வெளிச்சத்திலோ அல்லது சூரிய ஒளியிலோ வைத்துக் கணக்கிடக்கூடாது. குளிரவைக்கும்போது (சுடு நீரிலோ, உப்பு நீரிலோ அல்லது எண்ணெய்யிலோ) கொழுவை மேலும் கீழுமாக அசைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கொழுவின்மேல் கூர்மையான வரி விழாமல் தடுக்கலாம். கொதிக்கும் கொழுவை நீரில் அமிழ்த்தும்போது கொழுவின் வெட்டு விளிம்பு கீழ் நோக்கி இருக்குமாறு அமிழ்த்தவும்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் மார்ச்சு மாதத்தில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ.	ந.பை.
தென்னை நாற்றங்கால்—			
பட்டுக்கோட்டை, தஞ்சை ஜில்லா.	15,000	0	65
திருப்பாறைதுரை, திருச்சி ஜில்லா.	3,000	0	65
திண்டிவனம், தென்னாற்காடு ஜில்லா.	5,000	0	65
சோழவந்தான், மதுரை ஜில்லா.	2,000	0	65
சிங்கம்புனரி, ராமனுதபுரம் ஜில்லா.	8,000	0	65

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி மிகுந்த அதிசய ஜாதி
'கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்
கிடைக்குமிடம்:—
ராஜா பண்ணைத் தோட்டம்
தபால் பெட்டி எண். 1423, சென்னை-17.
தந்தி: RAJSEED போன்: 42262

பட்டிவீரன்பட்டி கூட்டுறவு காப்பி கியூரிங் இண்டஸ்ட்ரியல் சொசைட்டி

(தமிழ்நாடு கூட்டுறவுத் துறை—சென்னை-5)

பழனிமலை காப்பி, ஏல விவசாயிகளுக்கு, சாகுபடி விற்பனைக்குப் போதிய வசதிகள் அளிக்கும்பொருட்டு பட்டிவீரன்பட்டி கூட்டுறவு காப்பி கியூரிங் இண்டஸ்ட்ரியல் சொசைட்டி 1940-ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது. பதினேழு அங்கத்தினர்களுடன் ஆரம்பித்த இச்சங்கத்தில் இப்பொழுது சுமார் 1,300-க்கு மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், கொடைக்கானல் நிலக்கோட்டை, பழனி, திண்டுக்கல் ஆகிய ஐந்து தாலூகாக்களிலுள்ள காப்பி, ஏல விவசாயிகள் இந்தக் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினர்களாகலாம்.

சங்கம்

(1) அங்கத்தினர்களின் காப்பி, ஏலச் சரக்கை தரம் பிரித்து நல்ல விலைக்கு விற்பனை செய்து தருகிறது.

(2) அங்கத்தினர்களுக்கு குறைந்த வட்டிக்கு சாகுபடி செலவுக்கான கடனும், சரக்கீட்டுக் கடனும் வழங்குகிறது.

காப்பி, ஏல விற்பனை

காப்பி விற்பனைக்கு காப்பி போர்டின் ஏஜண்டாகச் சங்கம் பணியாற்றுகிறது.

* காப்பி போர்டு நிர்ணயித்த விலையின் பேரில் விவசாயிகளின் காப்பி சரக்கிற்கு பணம் பட்டுவாடா செய்கிறது.
* காப்பி, சங்கக் கிடங்கியில் வைக்கப்படுகிறது.
* பின்னர் சங்கம் சரக்கை தரம் பிரித்து, காப்பி போர்டு குறிப்பிடும் வியாபாரிகளுக்குக் கொடுக்கிறது.
* இவ் வேலைகளுக்காக காப்பி போர்டு, சங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக அளிக்கிறது.
* ஏலக்காய் சங்கத்திலேயே தரம் பிரிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் வியாபாரிகளுக்கு விற்கப் படுகிறது.
* விற்பனைத் தொகையில் சங்கம் ஒரு சத விகித கமிஷன் தொகையைக் கழித்து மீதியைச் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுக்கிறது.

கடன் வசதி

* சாகுபடி செலவுக்கென ஒரு அங்கத்தினர் ரூ. 10,000 வரை குறுகிய காலக் கடனாகப் பெறலாம்.
* சரக்கீட்டின் பேரிலும் ஒரு நபர் ரூ. 25,000 வரை கடனாகப் பெறலாம். அதாவது, "காப்பி லீன்" கடனாக ரூ. 25,000-மும், ஏலச் சரக்கின் பேரில் ரூ. 10,000-மும் கொடுக்கப்படுகிறது.
* ஆனால் குறுகிய காலக் கடனும், சரக்கீட்டுக் கடனும் ஏக காலத்தில் வழங்கப்படமாட்டாது.
* கடன் வாங்கிய விவசாயிகளின் காப்பி, ஏலச் சரக்கை காப்பி ஏலச் சங்கம் விற்பனை செய்து அந்தத் தொகையிலிருந்து கடன் தொகையை நேர் செய்துகொள்கிறது.

காப்பியைப் பொறுத்த மட்டில் சாகுபடியாளர்களுக்கு அவர்கள் சரக்கின் பேரில் முன் பணமும், சாகுபடி செலவிற்கும், தோட்டங்களைப் பராமரிப்பதற்கும் "காப்பி லீன் கடன்" கொடுக்கப்படுகிறது. ஏலச் சரக்கின் பேரில் ஒரு நபருக்கு மார்கெட் மதிப்பில் 60 சத விகிதத்திற்கு மேற்படாத தொகை கடனாக வழங்கப்படுகிறது.

சங்கம், மேலும் பல தனியார் கம்பெனிகளின் ஏஜெண்டாக இருந்து ஏலம், காப்பி முதலியவற்றிற்கான இரசாயன கலப்பு உரங்களையும், பூச்சி மருந்துகளையும் அங்கத்தினர்களுக்கு சகாய விலையில் வழங்குகிறது. காப்பி நாற்றுப் பெட்டிகளையும், டஸ்டர்கள், ஸ்பிரேயர்களையும் குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறது. நெல், பிண்ணாக்கு, மாவு அறைத்தலையும் சங்கம் உபதொழிலாகக் கொண்டுள்ளது.

ஸ்தாபிதம் 1885

தந்தி: நர்சரி — போன்: 3210

79 வருடங்களாக சேவை செய்து வரும் கான் சாஹிப் S. K. I. ஹாஜீ அப்துல் ரஹிமான் சாஹிப் ஸ்தாபனம்.

சேலம் நர்சரி கார்டன்ஸ், சேலம்.

புகழ்பெற்ற ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சை, தென்னை, இதர பழச் செடிகள், அலங்காரச் செடிகள், காய்கறி, புஷ்ப விதை களுக்குச் சிறந்த இடம்.

Proprietor. :

S. K. A. அப்துல் ரஜாக் சாயுபு.
சேலம் நர்சரி கார்டன்ஸ்,
செரி ரோடு, சேலம்-7.
(S. India.)

காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் பலன்

கத்தரியில் இரட்டிப்பு மகசூல்

[அ. சிவசங்கரன், நத்தம், மதுரை மாவட்டம்.]

காய்கறி அபிவிருத்தி திட்டம் வந்தபின் கத்தரி சாகுபடியில் எனக்கு இரட்டிப்பு மகசூல் கிடைக்கிறது. 2 ஏக்கர் பயிர் செய்ததில் ஏக்கர் ஒன்றுக்கு நிகர லாபமே ரூ. 630 வரை கிடைத்தது. இதற்கு முக்கிய காரணங்கள்—

(1) நல்ல விதைகளை விதைத்தல்.

(2) மேடைப் பாத்திகளில் நாற்றுவிடுதல்.

(3) போதிய உரமிடுதல்.

(4) நோய் பூச்சி வாராதிருக்க முன்னெச்சரிக்கையாக மருந்தடித்தல் முதலியவை.

எனது சாகுபடி முறை :

* நடுவதற்கு சுமார் 2 மாதங்களுக்கு முன்பே நிலம் புழுதிபட உழப்பட்டது.

* ஆட்டுக்கிடை நிறுத்தி உழுது, சணப்புத் தழை உரமும், தொழு உரமும் போடப்பட்டது.

* பின் 6 முதல் 8 உழவுகள் கொடுக்கப்பட்டன.

காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் பலன்

நாற்றங்கால் :

* 8′ நீளம், 3′ அகல மேடைப் பாத்திகள் தயாரிக்கப்பட்டன.

* பாத்திகளை நன்றாய்க் கொத்தி புழுதியாக்கியபின் விதை பரவலாக விதைக்கப்பட்டது.

* பாத்தியைச் சுற்றிலும் வடிகால் அமைக்கப்பட்டது.

* விதைத்ததும் தண்ணீர் கட்டி மக்கிய எரு மேலே தூவப்பட்டது.

* விதைத்த 3-ம் நாள் உயிர்த் தண்ணீர் விடப்பட்டது. பின் வாரத்திற்கு இருமுறையாக 3 வாரங்களுக்குத் தண்ணீர் விடப்பட்டது.

* 30-லிருந்து 40 தினங்களில் நாற்றுக்கள் நடவுக்கு ஏற்றதாகவிருந்தன.

நடவும் பராமரிப்பும் :

* மண்வெட்டியால் பார்கள் பிடித்து 1½ முதல் 2 அடி இடைவெளியில் நாற்று நடப்பட்டது.

* நட்ட 3-ம் நாளும், 7-ம் நாளும் தண்ணீர் பாய்ச்சப்பட்டது.

* மாதம் ஒரு முறையாக 3 முறைகள் களை எடுக்கப்பட்டது.

* ஒவ்வொரு களையெடுப்புக்குப்பின் மண் அணைக்கும் போது கலப்பு உரம் வைத்து தண்ணீர் விடப்பட்டது.

* பக்கக்கிளையடிக்க நாற்று நட்ட 45-வது நாள் செடியின் நுனிக்குருத்து கிள்ளிவிடப்பட்டது.

அறுவடை :

* வாரம் இரு முறையாக சுமார் 2 மாதத்திலிருந்து 3 மாதம் வரை காய்கள் பறிக்கப்பட்டன.

செலவு விபரம்.

	ரூ.	ந.பை.
நாற்றங்கால் தயாரிக்க—		
மண்வெட்டியால் கொத்தல், 4 கூடை மாட்டு உரம், விதையின் விலை, (பாதி விலையில்), விதைப்பு மூட்டு எருச் செலவு, 30 தினங்களுக்கு நீர் பாய்ச்சுதல்	19	50
எருவிடல்—		
தொழு உரம் வண்டி 20-க்கு, சணப்பு தழை உரம், எரு பரப்பு கூலி ..	35	00
நடவு நிலம் தயாரித்தல்—		
16 உழவு 8 ஏர் கூலி, பார் போட்டது கூலி, நாற்று நடவு செலவு, நடவுக்கு நீர் பாய்ச்சுதல்	47	50
நீர்ப்பாசனச் செலவு—		
மாதம் 5-க்கு 40 முறை நீர்ப்பாசனச் செலவுகளை எடுத்தல், கொத்தி அணைத்தல் 3 முறை, கலப்பு உரம் தடவை 3-க்கு விலை மருந்தடித்தவகையில் ..	217	00
அறுவடை—		
3 மாதம், மாதம் 8 முறை காய் பறிக்க, கடைசியில் செடி பிடுங்கிய செலவு ..	200	00
ஆகமொத்த செலவு	519	00

வரவு—

மாதம் ஒன்றுக்கு மொத்தம் 180 மூடை காய் பறிக்கப்பட்டது.

1 மூடை 40 வீசைகள் கொண்டது,

100 மூடை 1 மூடை 7·00 ரூபாய் வீதம்	700	00
60 மூடை 1 மூடை 6·00 வீதம்	360	00
20 மூடை 1 மூடை 4·50 ரூபாய் வீதம்	90	00
ஆக 180 மூடை விற்றதில் வருமானம்	1150	00
செலவு	519	00
ஏக்கர் ஒன்றுக்கு நிகர லாபம்	631	00

எனவே, இந்த காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் சலுகைகளனைத்தையும் நாம் பயன்படுத்தி நவீன காய்கறி சாகுபடி முறைகளையும் கையாண்டு நல்ல பலன் அடைவோமாக.

விவசாயச் செய்திக் கதிர்

[எம். காசிவிஸ்வநாதன், டி. ரகோத்தமராவ், விரிவினைப் பிரிவு, கோவை-3.]

உங்கள விளைபொருள்களை பத்திரமாகச் சேமித்து வைக்க :—

* தானியங்கள் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

* சேமித்து வைக்கும் கலங்கள், அறைகள், கிடங்குகள் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

* சேமிப்பிற்கு முன் தானியங்கள் உலர்த்தப்பட வேண்டும்.

* உலர்ந்த தானியங்களில் பூச்சிகளின் இனப் பெருக்கம் குறைவு.

* மூங்கில்கள், மரச் சட்டங்களின் மேல் மூட்டைகள் அடுக்கப்படவேண்டும். தரையின் ஈரம் மூட்டைகளில் படாது பாதுகாக்கவும்.

* முன்னெச்சரிக்கையாக மூட்டைகளின் மேல் பி.எச்.சி. அல்லது டி.டி.டீ. மருந்து தூவுங்கள்.

* எலிகள் புகாவண்ணம் மரக் கதவுகளின் கீழ் பாகத்தில் இருபுறங்களிலும் தகரத் தகடுகளைப் பொறுத் தலாம்.

* மாநில சேமிப்புக் கிடங்கு கார்ப்பரேஷன்—நிறுவி யிருக்கும் சேமிப்பு கிடங்குகளிலும் உங்கள் விளை பொருள் களைச் சேமித்து வையுங்கள்.

அந்நியச் செலாவணியளிக்கும் முந்திரியை பாதுகாறுங்கள்.

1. மரம் துளைக்கும் வண்டு

சேதம்:

* மரத்தின் மென்மையான பட்டைகளைத் தின்று, மரப்பாகத்தையும், வேர்களையும் துளைத்து சேதப்படுத்து கிறது.

* தாக்கப்பட்ட மரங்கள் பட்டுப்போகின்றன.

புழுவின் தோற்றம் :

* நன்கு வளர்ந்த புழு 3 அங்குல நீளமுடையது.

* மங்கலான வெண் நிறமுள்ள சதைப்பற்று கொண்டது.

தடுப்பு முறை:

* ஆரம்ப நிலையில் தாக்குண்ட பட்டைகளை நீக்கி புழுக்களை அழிக்கவும்.

* வேரில் தாக்கிய புழுக்களை அழிக்க நனையும் பி.எச்.சி. 1 சத கரைசலை மண் நனையும்படி தெளி யுங்கள்.

2. இலைப் பேன்

சேதம்:

* இலைகளைத் தாக்கி செடியின் வளர்ச்சி குன்று கிறது.

தடுப்பு முறை:

* பி.எச்.சி. 10 சத தூள் தூவலாம்.

(அல்லது)

* நனையும் பி.எச்.சி. 0.03 சத கரைசல்

(அல்லது)

0·015 பாரத்தியான் கரைசலைத் தெளிக்கலாம்.

3. முந்திரி இலை துளைக்கும் புழு

சேதம்:

* இளந்துளிர்கள் தாக்கப்பட்டு வாடிவிடுகின்றன.

* புழுக்கூடுகள் மண்ணிற்குள் கட்டப்படுகிறது.

தடுப்பு முறை:

* 0.1 சத டி.டி.டீ.

(அல்லது)

* 0.025 சத பாரத்தியான் கரைசலை இளந்துளிர் களின்மேல் தெளிக்கவும்.

4. பூவுறிஞ்சும் நாவாய்ப் பூச்சி

சேதம்:

* இப் பூச்சி இளந்தண்டுகளையும், பூங்கொத்து களையும், முந்திரிக்கொட்டைகளையும் துளைத்து சாற்றை உறிஞ்சி விடுகின்றன.

* தாக்கப்பட்ட தண்டுகள் கருத்து, உலர்ந்துவிடு கின்றன.

* கொட்டைகள் உண்டாவதும் பாதிக்கப்படுகிறது.

தடுப்பு முறை :

* 0·05 சதவீதம் பி.எச்.சி. அல்லது 0.1 சதவீதம் டி.டி.டீ. தெளிக்கவும்.

இதர பூச்சிகள்:

முந்திரி கம்பளிபூச்சி, முந்திரிக் குறுத்துப்புழு.

* 0.05 சதவீதம் பி.எச்.சி. அல்லது 0.1 சதவீதம் டி.டி.டீ. தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

மண்ணில் மறைந்திருக்கும் மலாங்கு புழுக்களை (NEMATODES) கண்டறிதல்.

* இலை உதிர்தல், இலைத் திரிபு, வேர் சேதப் படுதல், வேர் வீக்கம் போன்றவைகள் நோயின் அறி குறிகள்.

* தாக்கப்பட்ட பயிர் பாகங்களின் திசுக்களையோ அல்லது அச் செடிகளின் வேர் மண்டலத்திலுள்ள மண்ணையோ நுண்நோக்கி மூலமே ஆராய்ந்தறியமுடியும்.

மண் மாதிரி எடுத்தல்:

* தாக்கப்பட்ட செடியைச் சுற்றிலும் 8 அங்குல ஆழத்திற்கு சுமார் 300—350 கிராம் மண்ணை செடியின் ஒரு வேர் பாகத்துடன் எடுக்கவேண்டும்.

(27-ம் பக்கம் பார்க்க)

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 44425/63
தேதி 10—4—63 உத்தரவின்படி

1963-64 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின் கீழ் அங்கிகரிக்கப்பட்ட
ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையழுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்–கோ.ஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் வினியோகஸ்தர்கள் :

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,
93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு,
தபால் பெட்டி நெம்பர் 539, பெங்களூர்-2.

69673
JL
J.211m,N64
N64.21

1963-ம் ஆண்டு நவம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை

[சி. பாலசுப்பிரமணியன், சீ. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோயம்புத்தூர்-3.]

இம் மாதம் முதல் தினத்தில் தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. பின்னர் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் தேதி வரை பரவலாக மழை பெய்தது. 6-ம் தேதியன்று தமிழகத்தின் வட பகுதிகளில் ஆங்காங்கும் தென் பகுதிகளில் சிற்சில இடங்களிலும் பருவ மழை பெய்தது. 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் தேதி முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் வரட்சி நிலவியது. ஆனால் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி முதல் மூன்று நாட்கள் பரவலாக மழை இருந்தது. பின்னர் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி வரை பரவலாகவும் 22-ம் தேதி ஆங்காங்கும் மழை பெய்தது. பின்னர் 23, 24 தேதிகளில் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. 25-ம் தேதி முதல் மூன்று நாட்கள் தமிழகத்தில் பொதுவாக வரட்சி நிலை நிலவியது. 28-ம் தேதியன்று தமிழகத்தின் தென் பகுதிகளில் இடியுடன் கூடிய கனத்த மழை ஆங்காங்கு பெய்தது. ஆனால் எஞ்சிய பகுதிகளில் வரட்சி நிலவியது. இம் மாதக் கடைசி இரு நாட்களில் தமிழ் நாட்டில் பரவலாக மழை பெய்தது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் சற்று அதிகமாக மழை பெய்தது. இம் மழையால் சம்பா நெற்பயிர் தலைசாய்ந்தது. இப் பயிரில் குருத்துப் பூச்சி வெகுவாகக் காணப்பட்டது. வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் சற்று அதிகமாக மழை பெய்தது. நிலக்கடலை அறுவடைக்கு வந்தது. திண்டிவனம் பகுதிகளில் நிலக்கடலையில் புள்ளி நோயும், ஆமணக்கில் கொக்கி புழுக்களும் சிறிதளவு காணப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் சற்று அதிகமாக மழை இருந்தது. இம் மழை நெற்பயிருக்கு உகந்ததாயிருந்தது. இப் பகுதிகளில் நெற்பயிரில் கொள்ளை நோயும், குருத்துப் பூச்சியும் காணப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மழைக் குறைவு. இம் மழையால் வரகு, சோளம், நெல் முதலிய பயிர்கள் பயனுற்றன. கரூர் பகுதிகளில் சோளம், கொள்ளு விதைக்கப்பட்டன. நிலக்கடலை அறுவடைக்கு வந்தது. மதுரை மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இங்கு பெய்த சிறிது மழையும் நெல் நடவுக்கும், நிலங்கள் தயாரிப்பதற்கும் உதவியது. நிலக்கடலையில் சிறிதளவு சிகப்பு கம்பளிப்பூச்சி காணப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சற்று அதிகமாக மழை பெய்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் நெல், மிளகாய் நடவுக்கு வந்தது. சாத்தூர் பகுதிகளில் பருத்தி, கம்பு, சோளம், கடலைப் பயிர்கள் இம்மழையால் பயனுற்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த மழை நெல், பருத்தி, மிளகாய் முதலிய பயிர்களுக்கு ஏற்றதாயிருந்தது. அம்பாசமுத்திரம் பகுதிகளில் பலத்த மழையின் காரணமாக நெல் நடவுக்கு தாமதமாயிற்று. இங்கு நெற்பயிரை தூர் அழுகல் நோய் தாக்கியது. கோவில்பட்டி பகுதிகளில் பருத்தியில் நாவாய் பூச்சிகளும், திரிப்ஸும் பெருமளவிலும் மிளகாயில் சிறிதளவு அசுக்களும் காணப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக மழை பெய்தது. இம் மழையால் நெற் பயிர் பயனடைந்தது. இப் பகுதிகளில் மாமரங்களில் துளைப் பான்கள் (Mango hoppers) பெருமளவு காணப்பட்டன. நெற்பயிரில் சிறிதளவு குருத்துப் பூச்சியும் காணப்பட்டது.

கோவை மாவட்டத்தில் மழை போதிய அளவு இல்லை. ஈரோடு பகுதிகளில் பெய்த மழை நெல், மஞ்சள், கரும்பு, பருத்தி, சோளம் முதலிய பயிர்களுக்கு ஏற்றதாக இருந்தது. இங்கு பருத்தி விதைப்பும், புகையிலை நடவும் இம் மழையால் மேற்கொள்ளப்பட்டன. இங்கு நெற்பயிரை நாவாய் பூச்சிகளும், குருத்துப் பூச்சியும் அதிக அளவில் தாக்கின. மஞ்சளில் இலைப் புள்ளி நோய் காணப்பட்டது. பொள்ளாச்சி பகுதிகளில் நெற்பயிரில் நாவாய் பூச்சிகளும், பருத்தியில் பெருமளவு அசு, திரிப்ஸ், நாவாய்ப் பூச்சிகள், கற்றாளைப் பூச்சிகளும், புகையிலையில் சிறிதளவு அசுவும் காணப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் இம் மாதம் போதிய அளவு மழையில்லை. இங்கு பெய்த சிறிது மழையும், நெல், மரவள்ளி, கடலை, பருத்தி முதலிய பயிர்களுக்கு ஏற்றதாயிருந்தது. இங்கு நெற்பயிரிலும், பருத்தியிலும் நாவாய்ப் பூச்சிகள் தலைப்பட்டன. நாமக்கல் பகுதிகளில் பெய்த மழை நிலக்கடலை, சோளம், நெல், மரவள்ளி முதலிய பயிர்களுக்கு உதவிற்று. இத் தொகுதிகளில் நெற்பயிரில் பெருமளவு நாவாய்ப் பூச்சிகளும், கற்றாளைப் பூச்சிகளும் இலைப்பேனும், கொள்ளை நோய் சிறிதளவும் காணப்பட்டன.

நிலக்கடலையைச் சுருள் பூச்சிகள் பெருமளவில் தாக்கின. சோளப் பயிரை குறுத்துப் பூச்சிகள் சிறிதளவு தாக்கின.

நீலகிரி மாவட்டத்தில் சற்று அதிகமாக மழை பெய்தது. இம் மழையால் காய்கறிப் பயிர்கள், உருளைக்கிழங்கு மற்றும் தோட்டக்கால் பயிர்கள் பெரிதும் பயனுற்றன.

இம் மாதத்தில் குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (அங்குலத்தில்).

தேதி. (1)	இடத்தின் பெயர். (2)	மழையளவு. (3)
2—11—1963	கன்னியாகுமரி	3·94
3—11—1963	நாகப்பட்டினம்	5·99
5—11—1963	கூனூர்	4·90
14—11—1963	மீனம்பாக்கம்	5·20
17—11—1963	கடலூர்	4·77
17—11—1963	பாலூர்	3·80
18—11—1963	அம்பாசமுத்திரம்	3·75

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர்.	இம் மாத மழை அளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்	7·6	+1·2	அதிகம்.
கீழ்கரைப் பிராந்தியம்	17·9	+7·9	மிக அதிகம்.
மத்தியப் பிராந்தியம்	2·9	—2·3	மிகக்குறைவு.
தென் பிராந்தியம்	11·0	+3·4	அதிகம்.
மலைப் பிராந்தியம்	10·1	+2·3	அதிகம்.

1963-ம் ஆண்டு நவம்பர் மாதக் காலநிலை அறிக்கை.

இடத்தின் பெயர்.	மழையளவு (அங்குலத்தில்) இம் மாத மொத்த மழை அளவு.	சராசரியில் இருந்து மாறுபாடு.	1963-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து மொத்த மழை அளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்)	18·2	+4·3	50·6
திருர்குப்பம்*	3·4	+3·4	33·9
வேலூர்	4·8	—2·9	44·9
குடியாத்தம்*	3·9	—0·1	33·9
கீழ்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	15.1	+5·5	51·9
திண்டிவனம்*	8·1	+1·4	56·8
கடலூர்	22·9	+7·4	48·9
நாகப்பட்டினம் ..	27·8	+10·2	52 2
ஆடுதுறை*	20·8	+10·4	55·5
பட்டுக்கோட்டை* ..	12·7	+3·9	42·3
மத்தியப் பிராந்தியம்			
சேலம்	2·6	—1·2	35·0
கோயம்புத்தூர்* ..	1·9	—3·9	12·6
கோயம்புத்தூர் ..	3·2	—0 2	13·8
திருச்சிராப்பள்ளி ..	3·7	—3·3	22·2
தென் பிராந்தியம்			
மதுரை	4·7	—1·0	29·0
பாம்பன்	16·9	+5·2	34·2
கோயில்பட்டி*	11·0	+3·5	29 0
பாளையங்கோட்டை ..	6·3	—1·2	29·4
அம்பாசமுத்திரம்* ..	19·6	+11·4	49·6
நாகர்கோவில்*	7·6	+1·1	50·5
கன்னியாகுமரி*	10·8	+5·1	41·8
மலைப் பிராந்தியம்			
கொடைக்கானல் ..	11·8	+1·6	60 5
கூனூர்*	18 4	+6·5	53·0
உதகமண்டலம்* ..	5·1	+0·3	45 9
நஞ்சநாடு*	5·2	+0·7	61·2

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

(12-ம் பக்கம்—தொடர்ச்சி)

* எடுத்த மண் மாதிரியை பாலீதீன் போன்ற காற்றுப் புகாத கெட்டியான அட்டை அல்லது துணிப் பையிலிட்டு "மலாங்குப் புழு ஆராய்ச்சி நிபுணர் (Newatologist விவசாயக் கல்லூரி, கோவை-3" என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

குறிப்பு.—1. மாதிரியும், அம்மண்ணும் புழுக்கள் அழியாதிருக்க உலராதிருப்பது அவசியம்.

2. பெரிதும் தாக்கப்பட்ட செடியைச் சுற்றிலும் உள்ள மண் மாதிரி ஒன்றும், சுமாராகத் தாக்கப்பட்ட செடியின் மண் மாதிரி ஒன்றும் எடுத்தனுப்புவது நல்லது.

3. மண் மாதிரி பையின்மேல் பென்சிலால் மண் மாதிரி எடுக்கப்பட்ட கிராமம், தோட்ட சொந்தக்காரர், சாகுபடியான பயிர், மாதிரி எடுக்கப்பட்ட தேதி ஆகியவற்றைக் குறிப்பிட்டிருத்தல்வேண்டும்.

கீழ்க்கண்ட விவரச் சீட்டு ஒன்றும் தனியாக அனுப்புதல் வேண்டும்.

1. சாகுபடி செய்யப்பட்ட பயிரின் பரப்பு.
2. பயிரின் நிலை.
3. தாக்குதலின் தீவிரம்.
4. தாக்கப்பட்ட செடிகளில் காணப்படும் அடையாளங்கள்.
5. வயலில் முன்பு பயிரிடப்பட்ட பயிர்.

மாசி—பங்குனி மாதக் குறிப்புகள்

நெல்

* நவரைப் பயிருக்கு உரமிடுங்கள்.

* சம்பா அறுவடைக்குப் பின் பசுந்தாள் உரப் பயிர் விதையுங்கள்.

* உங்களுக்குத் தேவையான விதையை உங்கள் கிராம சகாயக்களிடம் வாங்குங்கள்.

சிறு தானியம்

* கோடைச் சோளம், கம்பு, கேழ்வரகு விதையுங்கள்.

பருத்தி

* மாசிப்பட்ட பருத்தி விதைப்பு. பி. 216-F கோடைப் பருத்தி விதையுங்கள்.

எண்ணெய் வித்து

* இறைவைக் கடலை தொடர்ந்து விதையுங்கள்.

பழ வகைகளும் காய்கறிகளும்

* கோடைக்கால காய்கறி, பழ வகை சாகுபடி செய்யுங்கள்.

கால்நடை சுகாதார வெளியீடு

வெக்கை நோய்.—மார்ச்சு மாதத்தில் இந்நோய் தோன்றுது.

தொண்டை அடப்பான்.—மார்ச்சு மாதத்தில் தஞ்சாவூர், தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் தோன்றக்கூடும்.

சப்பை நோய்.—மார்ச்சில் திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், வட ஆற்காடு, தென்னுற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் தோன்றக்கூடும்.

வெற்றிப் பாதை

விவசாய விளம்பர நாடகம்

[கே. எஸ். ஆலம்கீர், பி. எஸ். ஸி., (எஜி.), வேளாண் கல்லூரி, கோவை.]

காட்சி—3

வேலாயுதத்தின் வீடு.

(ராஜு உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கிறான்.)

ராமு—(உள்ளே நுழைந்து கொண்டே) வண்டா அதிகப் பிரசங்கி என்னடா எழுதிகிட்டுருக்கே.

ராஜு—ஒண்ணுமில்லேப்பா. எங்க பள்ளிக்கூடத்திலே எல்லாரும் பிரசங்கம் பண்ணனும்னு வாத்தியார் சொன்னாரு. அதுதான் தயார் பண்ணிகிட்டு இருக்கேன்.

ராமு—ஆளைப்பாரு பிரசங்கம் பண்ணுறாரும் பிரசங்கம். பிரசங்கம் பண்ற மூஞ்சியும் மொகரக்கட்டையும் பாரு. போடா போய் படி போ.

மூக்கன்—மச்சான் என்ன அப்படி சொல்லிட்டீங்க. நம்ம ராஜு பிரசங்கம் பண்ணி நீங்க கேட்டதில்லேயே. எங்கே ராஜு கொஞ்சம் ஆரம்பி.

ராமு—ஆமா....இவன் பிரசங்கம் பண்ணினா உன்னெப் போல கழுதைதான் கேக்கும்.

ராஜு—(ஆவேசத்துடன் எழுந்து) அவமானம்! தந்தையே அவமானம்! தன் மானம் தரை மட்டமாகும்போது அது தவிடுபொடியாகும் போது எந்தத் தமிழனும் தலைகுனிந்து நிற்க மாட்டான். தீட்டிய வாளும் தினவெடுத்த தோள்களும் அன்னை காட்டிய வீரமும் கொண்டு போர்க்களம் செல்வான், வீணர்களை வெட்டி வீழ்த்துவான்....வெற்றிவாகை சூடுவான்.

(ராமு அசந்து நிற்கிறான்.)

மூக்கன்—என்ன மச்சான். கல்லாட்டம் நின்னுட்டீங்க. பாத்தீங்களா பய வீரத்தை. இவனை இப்போ அனுச்பிச்சா சைனாகாரனை விரட்டியடிச்சிட்டு வந்துடுவான்.

ராமு—(அவனை அணைத்து) அருமையா இருந்துச்சுடா கண்ணு, அவசரப்படாதே. உன்னைபோல உணர்ச்சி உள்ளவங்க நம்ம நாட்டுக்குத் தேவை. தயார் பண்ணு பிரமாதமாய் உனக்கும் காலம் வரும் உன் வீரத்தைக் காட்ட (உணர்ச்சியோடு)....இதை உன் சித்தப்பா மட்டும் கேட்டான்னா அப்படியே உச்சி குளிந்து போவான்.

மூக்கன்—மெல்ல சொல்றீங்களே......

ராமு—(ஏதோ யோசித்து) மூக்கா....லட்சுமியைக் கூப்பிடு.

மூக்கன்—(குழைந்து கொண்டே) அக்கா........எக்கா, இங்கே வா......மச்சான் கூப்பிடுறாரு.

(லட்சுமி உள்ளே நுழைகிறாள்.)

ராமு—(பணத்தைக் கொடுத்து) இந்தா தம்பிக்கு அனுப்ப பணம் கொண்டாந்திருக்கேன்.

லட்சுமி—ஏது......பணம்......ஆச்சர்யமா இருக்கே.

ராமு—எம்புள்ளே அப்படிச் சொல்றே? திருடிட்டு வந்தேன்னு நெனச்சியா? இல்லே புள்ளே இல்லே.... (வருத்தத்தோடு) பருத்திக் கொட்டையும் புண்ணாக்கும் ஊட்டி ஊட்டி நான் வளர்த்தேன் பாரு ஒரு காளைக் கண்ணு அதை....வித்துட்டேன் அவ்வளவுதான். (கண்களை துடைத்துக் கொள்கிறான்) வச்சிரு தபால்கார தர்மலிங்கம் வந்த உடனே அவர்கிட்டே கொடுத்து சோமுவுக்கு அனுப்பச் சொல்லு.

லட்சுமி—(வருத்தப்பட்டு ஆறுதலுடன்) சரிங்க; அனுப்ப சொல்லிடறேன்.

ராமு—இன்னிக்கு வயல்லே தண்ணி கட்ட நம்ம கெடுவு. நான் போயிட்டுவரேன் (போகிறான்).

ராஜு—என்னம்மா....நம்ம சிங்கத்தை அப்பா வித்துடாரம்மா.....அம்மா....எம்மா......அப்பா இப்படி செய்யறாரு......நம்ம சிங்கத்தை அப்பா எவ்வளவு செல்லமா வளத்தாரு......அதனுடைய கொம்பும் வாலும் உடம்பும் வேற எந்த மாட்டுக்கம்மா வரும் ....இனிமே நான் யாருகூடம்மா விளையாடறது (அழுகிறான்).

லட்சுமி—அழாதேடா கண்ணு....அழாதே சீக்கிரம் ஒரு பசு வாங்கி அது காளைக் கண்ணு போடுமில்லே அதை நீ வளத்து சண்டைக்கு விடலாம் என்ன....போயி மாமனோடை விளையாடு....

மூக்கன்—வா ராஜூ தோட்டத்துக்கு போயி நம்ம நாயி ஜிம்மி கூட விளையாடலாம்.

லட்சுமி—விளையாடறத்துக்கு உனக்கு சொறி நாய்தானா கிடைச்சுது. சவுக்கமரம் மாதிரி வளர்ந்து இருக்கியே ஏதாவது பிரயோசனம் உண்டா!

மூக்கன்—அக்கா......என்ன நீ என்னை அவ்வளவு கேவலமா நெனச்சுட்டே. மச்சானுக்கு நான்தான் வலதுகை தெரியுமா......விளையாட்டில்லே.

லட்சுமி—சரி சரி....சும்மா பேசாதே கட்டுச் சோறு கட்டி வச்சிருக்கேன். மச்சானுக்கு கொண்டு போயி கொடு ....டேய் ராஜு இவன்கூட விளையாடாம ஒழுங்கா புத்தகத்தை எடுத்துபடி போ.

(வேலாயுதம் உள்ளே வருகிறார்.)

மூக்கன்—வாங்க மாமா......எங்கே தோட்டத்துக்கு போயிட்டு வந்தீங்களா....நம்ம காளிமுத்து உங்களைப் பார்க்கணும்னு சொன்னான்....

வேலாயுதம்—எதுக்குடா மூக்கா....நான் அவங்கிட்டே ஒண்ணும் கடன் வாங்கலியே. அப்படி இருக்கும் போது....

மூக்கன்—அதுக்கில்லே மாமா. நீங்க தோட்டத்தை விக்க றதா சொன்னீங்களா......அது விஷயமாகத்தான் வந்தாரு.

வேலாயுதம்—காளிமுத்து என் நிலத்தை வாங்கணும்னு சொன்னன். எங்கிட்ட பண்ணையாளா இருந்த காளி முத்து இன்னிக்கு பண்ணையாராயிட்டான். உம்.... என்ன செய்யறது காலம் மாறிப்போச்சு.

(கடன்கார செட்டியார் உள்ளே வந்து)

செட்டியார்—காலம் மாறினலும் கடன்காரங்க மாறமாட் டாங்க. என்ன பிள்ளைவாள். கடனை திருப்பித் தரதா உத்தேசமா இல்ல நாமத்தைப் போடறதுன்னு தீர் மானம் பண்ணிட்டிங்களா. இல்லே மனசிலே என்ன தான் நினைச்சுகிட்டிருக்கீங்க.

வேலாயுதம்—செட்டியாரய்யா இன்னும் 10 நாள் பொருத் துக்கங்க. என் நிலத்தையெல்லாம் விலே பேசிகிட்டு இருக்கேன். வித்ததும் பணத்தை கொடுத்துடறேன்.

செட்டியார்—இதுதான்யா கடசித் தவணை. அதுக்கப்புறம் என்னல் பொறுக்க முடியாது....வர்ரதை நீங்க அனுபவிக்க வேண்டியதுதான். நான் வர்ரேன் (செட்டியார் போகிருர்).

வேலாயுதம்—மூக்கா......போயி காளிமுத்துவை நான் கூப்பிட்டதா கூப்பிட்டுவா (மூக்கன் போகிருன்).

காட்சி—4

இடம்: தெரு

பாத்திரங்கள்: மூக்கனும், செட்டியாரும்.

(இருவரும் வருகின்றனர்.)

மூக்கன்—என்ன செட்டியாரே, நீங்க விஷயம் தெரியாமே வீட்டுலே, கன்னுபின்ருன்னு சத்தம் போட்டுட்டு வந்துட்டீங்க.

செட்டி—(கோபத்தோடு) பின்னே என்னய்யா காசு என்ன காச்சா தொங்குது.

மூக்கன்—ஆமாய்யா காச்சுதான் தொங்குது.

செட்டி—(ஆவலோடு வாயைப் பிளந்து ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு) எங்கே......?

மூக்கன்—எய்யா ஆ........ன்னு வாயைப் பொளக்குறே.

செட்டி—காசு காச்சுத் தொங்குதுன்னு சொன்னியே.

மூக்கன்—இங்கே தொங்கல்லேயா. விஷயத்தைக் கேளு நம்ம சோமு தம்பி பட்டணத்துலே படிக்குதுல்லே....

செட்டி—ஆமா....படிப்பு ஒண்ணுதான் குறைச்சல்.

மூக்கன்—என்யா முழுக்கக் கேக்காமே கதறுறே.

செட்டி—சரி சொல்லு.

மூக்கன்—படிப்புக்கு இங்கேயிருந்து பணம் அனுப்பறுங்க இல்லே. அதுலே அப்படி இப்படி மிச்சம் பிடிச்சு அதுலே நம்ம தம்பி ஒரு அஞ்சு ரூபாய்க்குப் பிரைஸ் பாண்டு வாங்குச்சாம்.

செட்டி—உம். சொல்லு......சொல்லு.....

மூக்கன்—அந்த பிரைஸலே இப்போ தம்பிக்கு 7,500 ரூபாய் பிரைஸ் விழுந்துருக்கு.

செட்டியார்—மூக்கா நம்ம கிட்டே கதையா விடுறே....

மூக்கன்—கதையா ? சந்தேகன்னு இந்தக் கடுதாசியைப் படிச்சுப்பாரு.

செட்டி—எனக்குத்தான் படிக்க வராதே....

மூக்கன்—அப்போ நான் சொல்றதை நம்பு. இந்த விஷயம் என்னத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

செட்டி—என் மூக்கா நீ சொல்றது அத்தனையும் நிஜமா

மூக்கன்—நான் எதுக்கு உங்கிட்டே பொய் சொல்றேன்.

செட்டி—சரி பணம் எப்போ வரும்.

மூக்கன்—இப்பத்தானே பிரைஸ் விழுந்துருக்கு இன்னும் ஒரு மாசம் ஆகும். இந்த விஷயம் வீட்டிலேயும் யாருக்கும் தெரியாது. ஒரு நாளைக்கி தம்பி சோமு திடீருன்னு வந்து பணத்தோட நிக்கப் போருன். எல்லாம் திணரப் போருங்க. அப்போ நீங்க வந்தீங் கன்னு உங்க பணத்தை விட்டெறிஞ்சுடுவாங்க. நீங்க பொருக்கிக்கிட்டு போயிடலாம்.

செட்டி—நிஜமாவா ?

மூக்கன்—ஆமா....

செட்டி—மூக்கா....நீ உங்க மாமா கிட்டே போய் செட்டி யாரு ஏதோ கோபமாப் பேசினலும் பின்னலே ரொம்ப வருத்துப்பட்டாருன்னு சொல்லு.... நான் வர்ரேன்.

மூக்கன்—செட்டியார் விஷயம் ரகசியம்..

செட்டி—ஒ....மூச்சுவிட மாட்டேன்.

(தொடரும்)

மண் அரிப்பைத் தடுத்து மண் வளம் காப்பீர்.

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

1964-ம் வருடம் பிப்ரவரி மாதத்திய கிராம நிகழ்ச்சிகளின் விவரம்.

சனி (15—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. ஆப்பக்கார அங்காயி.
2. சத்ய நெறி.
3. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (16—2—64)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம முன்னேற்றம்—பேட்டி.
கிராமச் சாவடியில் கால்யாண மண்டப வழக்கு விசாரணை (தனஞ்செயன் எழுதியது).

திங்கள் (17—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
சித்தர் பாடல்.
சரித்திரக் கதைகள்—கீர்த்திமிக்க மன்னர்கள்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
மாடிவீட்டு மாப்பிள்ளை : தனிக் குடித்தனம்.

செவ்வாய் (18—2—64)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. சோள சாகுபடி பற்றிக் குறிப்புகள்.

புதன் (19—2—64)

தேவாரம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
நம் கிணறு—உரையாடல்.
படப் பாட்டுகள்.
செய்தித் தாள்.
நாட்குறிப்பு—நாடகம்.

வியாழன் (20—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
திருப்புகழ்.
நமது திட்டம்—சிறு பாசனம்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (21—2—64)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2. குடும்பக் கட்டுப்பாடு.

சனி (22—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. சிறு தொழில்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (23—2—64)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
தென்னை பூஞ்சண நோய்கள்.
கிராம காலக்ஷேப மண்டபம்—கிராமத் தொண்டர் அணியின் மகாத்மியம்.

திங்கள் (24—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
அருட்பா.
கால்நடைகளின் சில சாதாரண நோய்கள்—அஜீரணமும் வயிற்று உப்புசமும்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
வளரும் தமிழகம்.

செவ்வாய் (25—2—64)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புக்கள்.
படப் பாட்டு.
கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சிகள்—
1. கேள்வி—பதில்.
2. டைபாய்ட் ஜுரம்.

புதன் (26—2—64)

அருட்பா.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
உடற்பயிற்சியின் அவசியம்—உரையாடல்.
படப் பாட்டுகள்.
செய்தித் தாள்.
கோண எழுத்துக் குஞ்சிதபாதம்—தொடர் சித்திரம்.

வியாழன் (27—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
திருப்புகழ்.
நமது சாதனை.
செய்தி விளக்கம்.

வெள்ளி (28—2—64)

தேசபக்திப் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி—பதில்.
2 மாணவர்களுக்கான சலுகை.

சனி (29—2—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப் பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. புதிய அளவு.
2. சத்ய நெறி.
3. நாட்டுப் பாடல் பயிற்சி.

பஞ்சாயத்து பழத் தோட்டம்

[எஸ். தியாகராஜன், பழ அபிவிருத்தி உதவியாளர், பட்டுக்கோட்டை.]

விவசாய அமைச்சர் கனம் P. கக்கன் அவர்கள் மாங்கன்று ஒன்றினை நடும் காட்சி.

பஞ்சாயத்து அரசாங்க கடன் பெற—

1. பஞ்சாயத்து தோட்டம் அமைக்க அரசாங்கக் கடன் கோர தீர்மானித்தல்.

2. தீர்மானத்தின் நகல் மாவட்ட விவசாய அலுவலருக்கு அனுப்புதல்.

3. பழத் தோட்டம் எழுப்பப்பட வேண்டிய இடம் பார்வையிடப்பட்ட பின் கடன் மனு தயாரித்தல்.

4. கடன் மனுவில் பஞ்சாயத்து தலைவரோ நிர்வாக அதிகாரியோ கையெழுத்திடல்.

5. பூர்த்தியான விண்ணப்பம், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி சிபாரிசுடன், மாவட்ட விவசாய அலுவலர் கடன் தொகை அனுமதி பெறுதல்.

6. கடன் தொகை பாதி, சிறந்தவகை பழச்செடிகளாகவும் மற்றது ரொக்கமாகவும் கொடுக்கப்படும்.

7. இக் கடன் தொகை ஐந்து வருடம் கழித்து ஆறும் வருடத்திலிருந்து பதினைந்து வருடம் முடிவுக்குள் 10 வருடாந்திர தவணைகளில் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.

பயன் எதும் அளிக்காத காட்டைப் பயனுள்ள பழத் தோட்டமாக்கினர் செருவா விடுதி பஞ்சாயத்து மக்கள் தலைவர் திரு. கருப்பையாவின் பெரு முயற்சி இது.

இத் தோட்டத்தை உள்துறை விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ந் தேதியன்று மாங்கன்றொன்று நட்டு ஆரம்பித்து வைத்தார்கள்.

செருவா விருத்தி பஞ்சாயத்து மக்களைப் பாராட்டி, இப் பழத்தோட்டம் சிறந்து விளங்க ஆசி கூறி, ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனக்குச் சொந்தமான புறம்போக்கு அல்லது வருமானமில்லாத காடுகளை அழித்து பழத் தோட்டம் அமைக்கக் கேட்டுக் கொண்டார்.

விவசாய அமைச்சர் கனம் P. கக்கன் அவர்கள் பழத் தோட்டத்தை ஆரம்பித்து வைத்த காட்சி. அமைச்சருடன், தீவிர விவசாயத் திட்ட ஜாயின்ட் டைரக்டர் அவர்களும், மாவட்ட விவசாய அதிகாரி அவர்களும், யூனியன் சேர்மன், பஞ்சாயத்து தலைவர், மற்றும் எம். பி. அவர்களும் உள்ளனர்.

[புகைப் படங்கம்: பழ அபிவிருத்தி உதவியாளர், பட்டுக்கோட்டை.]

Registered No. M-4646

தமிழ்நாடு அரசாங்கம்
1963

சென்னையில் காய்கறி தினம்

டாக்டர். எஸ். கிருஷ்ணமூர்த்தி
தமிழ் நாடு விவசாயத் துறை நெறியாளர்
உரையாற்றுதல்.

நகர காய்கறி தோட்டப் போட்டியில்
பரிசு பெற்ற திருமதி. கக்கன்
அவர்களுக்கு, உள்துறை விவசாய
அமைச்சர் திரு. பி. கக்கன் பரிசு வழங்கல்

பாரத் சேவக் சமாஜ் ஆதரவில் ராஜாஜி ஹாலில் 17-1-64 அன்று நடந்தது

காய்கறி கண்காட்சியை
அமைச்சர் பார்வையிடுதல்

பற்பல வகைகளில் சமைக்கப்பட்ட
உணவு பதார்த்தங்களை அமைச்சர்
கவனித்தல்

[போட்டோ : விவசாயச் செய்தி நிலைய போட்டோகிராபர்

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு,
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.